KALANILAYAM

தனிப்பிரதி விலை, அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5.] 1932 ௵ ஏப்ரல் ௴ 7௳ [No. 14

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 261
2. தமிழ்ப்பாடம் நளவெண்பா - சுயம்வரகாண்டம் 263
3. குன்றுடையானும் மக்களும் W.V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 266
4. ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் (காப்புப்பருவம்) கி. வெங்கடசாமி ரெட்டியார் 269
5. நம்மாழ்வார் வைபவம் (2-ம் பத்து 7 தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.,B.L. 271
6. அப்பர் (64 கலை—தர்க்கம்) E N. தணிகாசல முதலியார் B.A. B.L. 273
7. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 3. களம் 1.) ஷேக்ஸ்பியர் நாடகம் 274
8. கம்பராமாயணம் (சூர்ப்பணகைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 276
9. வர்த்தமானம் 279

கலாநிலயம்

வித்தகமோ விதிவசமோ. 6.

ஆதலின், பகுத்தறிவை மட்டுமே முற்றிலும்பெருக்கிவளர்த்து முதிர்வதினாலேயே மனிதரென்றவொரு தனிப்பெருமையில் ஒருபோதும் நாம் கனிந்தவர்களாகமாட்டோம். வித்தகத்தைப்பின்பற்றி வழிநடக்கப்பயிலோமெனின் பகுத்தறிவு பயனற்றதாகிவிடும் வித்தகமென்னும் உத்தமக் கொழுநனின்றிக் குமரிமூத்தபகுத்தறிவு எவ்வகை நலத்தையும்எய்துதற்கேனும் எய்துவித்தற்கேனும்ஏற்றதன்று. இரண்டுவரும் பகுத்தறிவு முன்சொன்னபடி குமரிமூத்துக் கழியுமோ அல்லது வித்தகத்தின் வழிசேர்ந்து வாழ்வதாகுமோ என்று தேர்வதற் கோர் சிறு அறிகுறி யுளது. முதன்முதல் இதயத்தில் உதிக்கின்ற அன்பின் இங்கிதத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி தன் பகுத்தறிவைப் பழக்கி வைத்திராத வொருவன் வித்தகனல்லன். ஒரு விடயத்தில் விவகரிக்க நேருங்கால், தான் செய்யநினைப்பதொன்றை, "இது அறிவிற்கு உரியதோ," என்று ஆராயப் புகுவதன்முன், "இது அன்பிற்குரியது; ஆதலின் வேறொன்றும் பார்க்கவேண்டா" என்றஎண்ணமே மேலெழுந்து தலையெடுக்குமாயின் அப்பொழுது வித்தகத்தின் ஆட்சி நிறுவப்பெறுகின்றதென்று தெரிந்துகொள்ளலாம். தம் பகுத்தறிவைக் கீழ்படுத்தக் கற்றிலரேல், இயேசுகிறிஸ்து கௌதமபுத்தர் போன்ற வித்தகவீரர்கள் என்செய்ய வல்லவர்களாயிருந்திருப்பார். வீரர்களின் செய்கைகள் ஒவ்வொன்றும் பகுத்தறிவின் எல்லைக்கு அப்பாலே நிகழ்ந்தவைகளாயிருக்கும். அன்பினது ஆர்வத்தால் இவ்வெல்லையைக் கடந்துசெல்லும் வித்தகத்தைத் தடுக்கமுயல்கின்றது பகுத்தறிவு. ஆதலின், பாவிப்பெருகத் துவக்குகின்ற ஆன்மாவினகவயின், அன்பிற்கும் பகுத்தறிவிற்கும் இடையே கடும்போர் விளையாநிற்கும்; எனினும் இறுதியில் இவ்விரண்டிற்கும் இடையே ஏற்படுகின்ற ஓர் அமைதி யுடன்படிக்கையினின்று வித்தகம் பிறக்கின்றது. எத்துணைக்கெத்துணை, பகுத்தறிவு தன் உரிமைகளை அன்பிற்கு விட்டுத்தருகின்றதோ அத்துணைக்கத்துணை இவ்வமைதியும், ஆழமும் அகலமும் அடைந்ததாகின்றது.

வித்தகந்தான் அன்பின் விளக்கு; மீண்டும், அன்பே அவ்விளக்கிற்கு வேண்டிய தூநறு நெய்யென்றுங் கூறலாம். அன்புதா னுடையோமாயின், வித்தகர்களாகாமற் றீரமாட்டோம்; வித்தகர்களாவோமெனின் அன்புடையராதலும் இன்றியமையாததே. ஒருவனுக்கு அன்பொன்று என்றேனும் சுரந்துபாய நேருமாயின், அவ்வன்பு அவனை நல்லவனுக்கிநடத்திவைக்கும். மெய்யுணர்வெய்தி வளர்வதென்றுரைப்பதன்றி "நல்லவன் ஆதல்" என்பதற்கு வேறுபொருளில்லையே. வித்தகத்தின் நல்லுணவு அன்பு; வித்தகந்தான் மீண்டுமவ்வன்பிற்கு நல்லுணவு மாகின்றது. இன்னணம், அன்பின் வழியாளர்களும் மெய்யுணர்வின் செயலாளர்களும் கைகோத்துச் சூழ்ந்துநிற்கும் ஓர் ஒளிவட்டம் தோன்றுமேல் உலகம் உய்யும்நாள் உதித்ததென் றுரைக்கலாம். அதுவரையிற் புரிவனவெல்லாம் இருளின் செய்கைகளே. அவ்விருளுந்தான் இகலெனுங் கொடிய பகைத்தீயை விழுங்கிப் புழுங்குகின்றது. ஒளியில்லா வெம்மையிதனைப் பொறுக்கலாற்றாமல் ஒருவரைவிட்

டொருவர்விலகிச்செல்லவே முயல்கின்றனர். விதியின் வலி முழுமையுஞ் செல்லக்கூடிய சமயமும் அதுவே.

பகுத்தறிவெனப்படுவதுயாதென்றும்மற்று,வித்தகமெனப்படுவது யாதென்றும் வரையறைசெய்து அவைகளுக்கிடையேயுள்ள வேற்றுமைகளிற் சிலவற்றை விளக்கிவந்தோம். இதுகாறும் இதுபற்றி நாமிங்கு உரைத்திருப்பவைகளை ஒரு வாக்கியத்தினுள் அடக்கிச் சொல்லவேண்டுமெனின்— "ஐம்புலன்களையும் காமக்குரோதாதிகளையும் அடக்கிஆள்வது பகுத்தறிவாக, அப் பகுத்தறிவையும் அடக்கிஆளவல்லது வித்தகம்", என்பது அமையும். இதன்படி, மனிதன், தன்னுயிரையும் இம்மைவாழ்வையும் மறுமைக்கோர் நற்கதியையும் காத்துக்கொளற்கு உதவிசெய் நற்கருவியாய் நிற்பது பகுத்தறிவு என்பதும்; மற்று அவன், தன் உணர்வின் மெய்யாய தூய்மையையும் உயரிய தன் எண்ணங்களையும் காத்துநிற்கும் நலத்தது வித்தகம் என்பதும் இங்கு உரைத்திருப்பவைகளினின்று தெரிவுறப்பெறுவது அருமையன்றென நினைக்கின்றோம்.

இனி, உயரிய எண்ணங்களைக் காத்துநிற்கும் நலத்தது வித்தகம் என்றுரைப்பதன் கருத்தினை ஒருசிறிதிங்கு உணர்ந்துகொள்ளல் வேண்டும். ஏனெனில் அதனாலும், வித்தகத்திற்கும் பகுத்தறிவிற்கும் ஓர் வேற்றுமை வெளிப்படுவதன்றியும், வித்தகவழியினை விழைவோர்தமக்கு இடையிடையே எழவல்ல சிற்சில ஏக்கங்கள் தெளிந்தகலுமாறு இது உதவிமிகச் செய்வதுமாகும். நாம்பெற்றுள பகுத்தறிவின் திறம் நம்முடைய எண்ணங்களின் தெளிவிற் கேற்றதாயிருக்கும். நம்மை இயக்குவன நம்முடைய எண்ணங்கள். இவ்வெண்ணங்களை வரையறுத்து வகைப்படுத்தித் தருக்கத்தொடர்புடன்தெளிவுறத் தெரிவிக்கவல்லவராவோமாயின், பெருகுகின்ற பகுத்தறிவின் ஒழுக்கங்கள் இவையென உணர்ந்துகொள்ளலாம். இவ்வண்ணம் தெளிவுபெற் றியங்கும் எண்ணங்களெல்லாம், தன்னிற் பிறந்து தன்னைத் தொடர்ந்து தன்னில் முடிவனவாயிருக்கும்.

> துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான்
> வைத்துக் கழியு மடவோனை—வைத்த
> பொருளு மவனை நகுமே யுலகத்
> தருளு மவனை நகும்

[தன் செல்வத்தைத் தானும் அநுபவித்துக் கழியாமலும் துறவிகளுக்குக் கொடுக்காமலும் வீணே வைத்து இறந்து போன மடையனை இகழ்ந்து, அவன் வைத்திருந்த பொருளும் சிரிக்கும் உலகத்திலுள்ள அருளும் சிரிக்கும்]

> எனதென தென்றிருக்கு மேழை பொருளை
> யெனதென தென்றிருப்பன் யானுந்—தனதாயிற்
> றானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
> யானு மதனை யது.

[என்னுடையது என்னுடையது என்று காத்துவைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு மடையனது செல்வத்தை, யானும் என்னுடையது என்னுடையது என்று சொல்லிக்கொண்டிருப்பேன். தன்னுடையதாயின்—அவனும் அதனை ஒருவருக்குங் கொடுக்காமலும் தானு மனுபவிக்காமலும் இருக்கின்றான்—நானும் அவன் செல்வத்தை ஒருவருக்கும் கொடுப்பதற்கில்லை நானும் அனுபவிப்பதற்கில்லை-எனின், அவன் செல்வத்தை என்னுடைய செல்வம் என்று சொல்லிக் கொள்வதிற் குறையொன்று மில்லையே]

என்னும் நன்கறிந்த இவ்விரண்டு நாலடியார் செய்யுள்களிலும் கூறப்பெற்றுள்ள ஈயாமையைப் பற்றிய எண்ணங்கள் ஐயமறத்தெளிந்துதிகழ்கின்றன.காமக்குரோதாதிகளில் ஒன்றாகிய உலோபத்தை வென்று திகழ்கின்ற பகுத்தறிவின்பாற்பட்ட எண்ணங்கள் இவை. ஐயமொன்றிற்கும் இடமில்லாமையுடன் இவ்வெண்ணங்கள் அவைகளை யுடையவன்தன்னையே சூழ்ந்து நிகழ்கின்ற தன்மையையும் எளிதிற் கண்டுகொள்ளலாம். மற்று,

> செல்வத்துப் பயனே யீதல்
> துய்ப்போ மெனினே தப்புன பலவே

என்னும் புறநானூற்றடிகளையும்,

> சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
> மீத லியையாக் கடை

என்றும்,

> நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
> மில்லெனினு மீதலே நன்று

என்றும், எடுத்தியம்பும் திருக்குறட் செய்யுள்களையும் ஆழ்ந்து நாம் கருதுவோமெனின், இக்கொள்கைகளுக்கு ஆதாரமாயிருக்கின்ற எண்ணங்கள், பொய்யலவேனும், தெளிவிலவாய்த் தீர்வது புலப்படும். நாலடியாரில் உரைத்திருக்கும்வண்ணம் செல்வத்துப் பயன்களில் துய்ப்பதுவும் ஒன்று ஆகும் என்ற எண்ணத்தை எவரும் ஐயுறார். செல்வத்தின் தன்மையும் அதனைத் துய்த்தலின் இன்பமும் இன்னதென வார்த்தைகள்கொண்டு வரையறுத்துக் கூற இயலும்.

> ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை
> வைத்திழக்கும் வன்க ணவர்

என்னும் திருக்குறள், செல்வத்தைத் துய்க்கும்வகைகளில் ஈகையும் ஒன்று எனக் கூறுகின்றது. நாலடிச் செய்யுள்களவ் விரண்டும் இத்திருக்குறளும் தன்னைத் தழுவியும் தெளிவுபெற்றும் எழுந்த பகுத்தறிவின் திறம்வாய்ந்த எண்ணங்களையே ஏந்தியிருக்கின்றன. இவைகளுக்கெதிர், துய்த்தலென்னும் தோற்றமேஇல்லாமல் ஈதலொன்றே செல்வத்துப் பயன் என்ற அக் கருத்தை என்னவென்று உணரவல்லோம்; ஈதலே பயனாகும் என்னுங்கால் 'பயன்' என்பதன் பொருளென்ன? இதனைத் தெளிவுபடுத்திச் சொல்லமுயல்வோர்க்கு அதன் அருமை தெரியவரும். அப்படியே, ஈதலியலாதாயின் சாதலே எவ்வகையில் நல்லதென்று நவில்தற் குரியதாகின்றது? எதனைப்பற்றி எதனைத் தொடர்ந்து எவ்வயின்முடிகின்றதிவ்வெண்ணம்? இம்மையை அவலமாக்குவதுமரணம், ஈத லியையாக்கடை அம் மரணத்தையும் இனியதாக்கிய வள்ளுவர், மறுமையில்லையாயினும் ஈதலே நன்றென்று நவின்ற கருத்திற்கு உருவும் உறுப்புக்களும் கொடுக்க இயலுமோ? இம்மையையும் மறுமையையும் மனத்தினின்று நீக்கியபின் ஈகையெண்ணத்தின் உண்மைத் தன்மையைச் சிந்தித்துணரப்புகுங்கால் தெளிவிற்கு மாறாகத் தளர்வே மேன்மேலும் விளைந்து மங்கிய கருத்தினோடு ஒயும் படி மிகவிரைவில் நேரிடும்—இவைதாம் வித்தக எண்ணங்கள்; ஆராய்ச்சிக்கும் அப்பாலாய ஆன்மசிந்தனைகள் இவை, நம்முடைய வித்தகம் ஆதலின், இதுகாறும் தெளிவுபெற்றிலாக் கருத்துக்களிலேயே காணக் கிடக்கின்றன. இதுவன்றி, நன்கு தெளிந்து வரையறைப்பட்ட கருத்துக்களை நம்முடைய வாழ்க்கையை ஆளும்படி விட்டுவிடுவோமாயின் பின்னர் அன்பிற்கேனும் நன்மதிப்பிற்கேனும் சிறிதேனும் நாம் தகுதியற்றவர்களாகிவிடுவோம். ஏனெனில், உற்றுநோக்குங்கால், ஈகையாளர்களாய் நம்மை இருக்கும்படி தூண்டுகின்ற

காரணங்களைவிடத் தெளிவற்ற எண்ணங்கள் எவை? எதனினும் சிறியன சிந்தியாமல் பெருந்தகையான எண்ணங்களையே நாம் போற்றுவதற்குத் தெளிவான காரணங்கள் எடுத்துக்கூறக்கூடுமோ? கலைப்பொருள்களினிடத்தேனும்இயற்கைத் தோற்றங்களிலேனும் திகழ்கின்றஅழகின்பால் நமதுள்ளம் தவழ்ந்து தங்கிஇன்பப்பெருக்கெடுப்பதற் குரியனவாய் நிகழ்கின்ற எண்ணங்களை எவ்வாறு வகைசெய்து பேசுதற்கியலும். கடவுளென்ற நினைவினளவிலே உடல்சிலிர்த்து ஓங்குகின்ற உவகைக்குக் காரணமாய எண்ணங்களைத்தெளிவுறக் கருதியுரைக்க எவர் வல்லார்? அன்பு அழகு மெய்ம்மை அனைய மேன்மையான விடயங்களைப்பற்றி எழுகின்ற சிந்தனைகள், வித்தகநிலைக் குரியவாதலின், தெளிவிற் குறைவுபட்டே விளங்குகின்றன.

வித்தகஎண்ணங்கள்,பகுத்தறிவிற்குமாறாக,தெளிவற்றிருக்கலாம்என்றுஇதன்முன்னர்இசைத்தோம்.இதனின்றுதெளிவற்றஎண்ணங்களெல்லாம்வித்தகமாமென்றே தருக்கம்பிழைத்து மதித்தலாகாது. ஏனெனில், "சுகம்" என்பதொன்று தமக்கு எங்கிருந்தோ வருதற்கிருக்கின்றதென்றும், அச்சுகத்தினைத் தாம் அடையவொட்டாமல் பிறர் தடுக்கின்றனரென்றும், பலவகைகளில் முன்னேற்றங்களடைய வேண்டுமென்றும்,சுதந்தரமென்றும்சமத்துவமென்றும் சகோதரத்துவமென்றும், இன்னபல பேசுகின்ற சொற்றொடராரவாரங்களின் தன்மைகளைப் பண்டைய தலையங்கங்களின் பலவற்றில் விளக்கியிருக்கின்றோம். இத்துறைகளில் விவகரிப்பவர்களை "நீர் வேண்டுவதென்ன,செய்வதென்ன, செப்புமின்"எனநெருங்கி வினவப்புகுங்கால்அவர்களுடைய எண்ணங்கள் அவர்களுக்கேயும் தெளிவின்றிப் போகின்ற புதுமை வெளிப்படும்.உள்ளொன்றும் வைக்காமற் புறமொன்று பேசிகின்றவர்களெனத் தெரிந்து கொள்ளலாம். சுயஆட்சி, சமயவிடுதலை சமூகவிடுதலை முதலியவைகளும்,இவைகளிலிருந்து தாம் துய்ப்பதற்குரிய இன்பநலங்கள் உளவென்ற எண்ணங்களும், ஆராய்ச்சி செய்யுங்கால் அந்தத்தில் தெளிவின்றித் தீர்ந்துவிடுவதை உணர்வதற்குச் சிறிதே மதிவேண்டும். மற்று.இவ்வண்ணம் தெளிவற்றிருக்கின்ற காரணத்தால் இவையனைய எண்ணங்களை வித்தகவகைகளிற் சேர்த்துவிடலாகாது. இவை தன்னைச்சூழ்ந்துழக்கும்எண்ணங்கள்; அறிவற்ற ஆசைகள். இதனோடு வித்தக எண்ணங்களின்தெளிவின்மையை மயங்கலாகாது.தன்னைச்சாராது தெளிவின்றி எழும் எண்ணங்கள் வித்தகம்; தன்னைச்சார்ந்து தெளிந்தெழும் எண்ணங்கள் பகுத்தறிவு; தன்னைச் சார்ந்து தெளிவின்றி எழும் எண்ணங்கள் மதியீனம். இவ்வேற்றுமையை,

> கல்லாக் கழிப்பர் தலையாயார் நல்லவை
> துவ்வாக் கழிப்ப ரிடைகள் கடைக
> ளினிதுண்ணே மாரப் பெறேம்யா மென்னு
> முனிவினாற் கண்பா டிலர்

[நூல்களைக் கற்பதிலேயே தம் பொழுதினை இனிது செலுத்துவார் மேலோர். இடையாயினர் நல்லவைகளைத் துய்ப்பதிலே தம் பொழுதினைச் செலுத்துவார். இனிய வஸ்துக்களைத் தாம் அனுபவிக்கவில்லையே, அவைகளை நிறையப் பெற்றிருக்கவில்லையே என்னும் வெறுப்பினால் உறங்காமற் கிடப்பார் கடையாயினோர்]

என்னும் நாலடிச்செய்யுள் நன்கு விளக்குகின்றது. உயரிய நூல்களை ஓதுவதே கருமமாய்க்கொண்ட மேலோரை, "எற்றுக் கிதனை ஓதியவண்ணமா யிருக்கின்றீர். ஓதுவதே உவகை என்பீரேல், அவ்வுவகைதான் எத்தகைத்து?" என வினவுவோமாயின், இதுபற்றி அவர் மனத்தில் எழுகின்ற எண்ணங்களை என்னென்று வரையறுத் தியம்புவார்? நல்லவை என்று துய்த்துக் கழிப்பவர்தம் எண்ணங்கள் பகுத்தறிவினால் தெளிந்தவைகளா யிருக்கும். "இனிதுண்ணேம், ஆரப் பெறேம் யாம்" என்று முனிந்திருப்பவர், மொத்தத்தில் எல்லாம் தம்முடைய துய்ப்பிற்கு இடையூறாயிருக்கின்றன வென்று கண்பாடிலாது ஏங்குபவர்களேயன்றி, "உண்மையில் நீவிர் குறையென்று கருதுவது நீங்கினால் நித்திய இன்பம் வந்துவிடுமோ! எதனை எவ்வாறு பெற்றுத் துய்க்கவேண்டுமென் றெண்ணுகின்றீர்" என்ற கேள்விக்குத் தம் எண்ணங்களைத் தெளிவுடன்செப்பமாட்டாதவர்களாய்த் திகைக்கநேர்வதைச் சோதித் தறிந்துகொள்ளல் சுலபமே.

தமிழ்ப் பாடம் 14.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[246-வது பக்கத் தொடர்ச்சி]

> வழிமேல் விழிவைத்து வாணுதலா ணாம
> மொழிமேற் செவிவைத்து மோகச்—சுழிமேற்றன்
> னெஞ்சோட வைத்தயர்வான் கண்டா னெடுவானில்
> மஞ்சோட வன்னம் வர. 49.

பதப்பிரிவு:—வழிமேல் விழி வைத்து வாள் நுதலாள் நாம மொழிமேல் செவி வைத்து மோக சுழிமேல் தன் நெஞ்சு ஓடவைத்து அயர்வான் கண்டான் நெடு வானில் மஞ்சு ஓட அன்னம் வர.

அன்வயம்:—வழிமேல்......அயர்வான் நெடுவானில் மஞ்சு ஓட அன்னம் வரக் கண்டான்.

கருத்து:—கலங்கியஉள்ளத்தனாய்ச் சோலையில் காத்திருந்தநளன் அன்னம் மீண்டுவருவதைக் கண்டான்.

பதவுரை.

வழிமேல் - (அன்னம் வரவேண்டிய) வழியின் மேல்
விழி - தனது பார்வையை
வைத்து - (நீக்காமல்) செலுத்தியும்,
வாள் - ஒளிபொருந்திய
நுதலாள் - நெற்றியையுடைய தமயந்தியின்
நாமம் - பேராகிய
மொழிமேல் - சொல்லின்மேல்
செவி - (தனது) காதுகளை
வைத்து - நிறுத்தியும்,
மோகம் - மோகமென்னும்
சுழிமேல் - சுழியின்மேல்
தன் - தன்னுடைய
நெஞ்சு - மனதை
ஓட - அலையும்படி
வைத்து - வைத்தும்
அயர்வான் - சோர்பவனாகிய நளன்,
நெடு - பெரிய

வானில் - ஆகாயத்தில்
மஞ்சு - வெண்மேகங்கள்
ஓட - போகவும்
அன்னம் - அன்னமானது
வர - வரவும்
கண்டான் - பார்த்தான்.

விளக்கம்: —

வழிமேல் விழிவைத்து:—சென்ற அன்னம் எப்பொழுது வருமோவென அவ்வழியிலே வைத்தகண் வாங்காமல் பார்த்துச் சோர்ந்துபோனான்.

வாள் நுதலாள் நாம மோழிமேல் சேவிவைத்து:—உள்ளத்திலேஒன்றைஊன்றி நினைப்பவர்களுக்குவெளியிலே நிகழ்வதெல்லாம் அந் நினைவிற்கு இணங்கித் தோன்றுவது இயற்கை. தமயந்திதமயந்தி என்ற எண்ணமே முழுமனதும் குடிகொள்ள நளன் இருந்தானுதலால், இலை யசைந்தாலும் குருவி கூவினாலும் அவனுக்கு தமயந்தியின் பேரைக் கூப்பிடுவது போலவே கேட்டது. கேட்கக்கேட்கப் பிரபஞ்ச முழுவதும் தமயந்திதமயந்திஎன்றே தன்காதருகில் ஒலிக்கக் கேட்டு அப் பேரின் ஒலிக்குத் தன்செவியை அர்ப்பணம் செய்துவிட்டிருந்தான்.

மோகச் சுழிமேல் தன் நேஞ்சு ஓடவைத்து:—மோகம் என்பது ஒரு பெரியநீர்ச்சுழியாக உருவகம் செய்யப்பட்டிருக்கிறது. வதனமதி, என்பதுபோல் ஒன்றையே மற்றொன்றாகப் பாவிப்பது உருவக அணி ஆகும்என முன்னால்கூறியிருக்கின்றேன். அவ்விதமே மோகச்சுழி, என்பது மோகமாகிய சுழி என்று பொருள் படிவதால் உருவகம். இச்சுழியில் அவன் மனம் ஒரு துரும்புபோல் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தது. நீர்ச்சுழியுள் பட்டவொரு துரும்புபோல் அவன்மனம் காமத்தால் அலைப்புண்டு கிடந்தது, என்பது பொருள்.

அயர்வான்:—அயர்கின்றவன் - அயர்வுகொண்ட நளன்.

நெடுவானில் மஞ்சுஓட அன்னம்வரக் கண்டான்:-அன்னம் போன வழிமேல் விழிவைத்துப் பார்த்துக் கொண்டிருந்த நளன், ஆகாயவலயத்தில் சிறிய வெண்மேகம் ஒன்று தோன்றியபோதெல்லாம் அதனைக் கண்டமாத்திரையில்அன்னந்தான் வந்துவிட்டதென வெண்ணியெண்ணி மோசம்போய்க்கொண்டிருந்தான் என்றும், இப்பொழுது அந்தப் போலிஅன்னங்களாகிய மேகங்கள் போக, நிசமான அன்னப்பறவையேவருவதைக் கண்டானென்றும் கூறுவதுதான் இந்த வாக்கியத்திற்குப் பொருத்தமான பொருள்.

குறிப்பு:—அயர்வான். அயர்தல் - சோர்தல். அயர்வான் - சோர்கின்றவன். முன் (210-வது பக்கம்) பெயர்ச் சொல், வினைச் சொல், இவைகளைப் பற்றிய இலக்கணம் சிறிது சொல்லியிருக்கின்றேன். மரம் நாய் சூரியன், போன்ற பொருள்களின் பெயரையேனும், அழகு செம்மை போன்ற குணங்களின் பெயரையேனும், கொலை பேச்சு நடத்தல் போன்ற தொழில்களின் பெயரையேனும் குறித்துநிற்கின்ற சொற்கள் பெயர்ச் சொற்களாகும். இவைகளெல்லாம் ஒரு பெயரால் அணையும் பெயர். ஆனால் வினையினாலும் ஒன்றிற்கு ஒரு பெயர் வரலாம். போனவன் சிரித்தவன் என வருமானால் இவைகளை வினையால் அணையும் பெயர் என்று இலக்கண நூல்கள் கூறும். போனவன் சிரித்தவன் என்ற பொருள் ஒன்றுமில்லை. ஆனால், போ, சிறி என்ற வினைகளையொட்டிய ஒருவனை அவைகள் குறிக்கின்றன. ஆகையால் அவைகளுக்கு வினையால் அணையும் பெயர் என்ற பெயர் வந்தது. போனவன் சிரித்தவன் என்ற உருவத்தில் சொற்கள் இருந்தால் சந்தேகம் இல்லை. ஆனால் போனான் சிரித்தான் என்ற உருவமும் வினையாலணையும் பெயர்களுக்கு உண்டு. போனான் சிரித்தான், என்பனபோன்ற முடிவுடைய சொற்கள் சாதாரணமாக வினைமுற்றாகத்தான் வரும். எனினும் போனானைப் பின்பற்றினேன், இதுகண்டு சிரித்தானுக்குச் சிறிதும் அறிவில்லை, என்ற வாக்கியங்களில் அவை வினையாலணையும் பெயராக வருகின்றன. 'நான் உன் வீட்டிற்கு வந்தேன்', என்றதில் வந்தேன் வினைமுற்று. 'வந்தேன் எனக்கு நீ முகங்கொடுக்கவில்லை' என்றதில் வந்தவன் என்ற பொருளில் வினையாலணையும் பெயர். [மற்றப் பெயர்ச் சொற்களெல்லாம் காலம்காட்டாது; இந்த வினையாலணையும்பெயர் மாத்திரம்காலம் காட்டும்] அயர்வான், என்பது இவ்விதம் வந்த வினையாலணையும் பெயர்.

முகம்பார்த் தருணோக்கி முன்னிரந்து செல்வர்
அகம்பார்க்கு மற்றோரைப் போல—மிகுங்காதல்
கேளா விருந்திட்டா னன்னத்தைக் கேளாரை
வாளால் விருந்திட்ட மன். 50

பதப்பிரிவு:—முகம் பார்த்து அருள் நோக்கி முன் இரந்து செல்வர் அகம் பார்க்கும் அற்றோரை போல மிகும் காதல் கேளா இருந்திட்டான் அன்னத்தை கேளாரை வாளால் விருந்து இட்ட மன்.

அன்வயம்:—கேளாரை வாளால் விருந்திட்ட மன், முன் செல்வரை இரந்து (பின் அவர்களது) முகம் பார்த்து அருள்நோக்கி அகம்பார்க்கும் அற்றோரைப் போல, (தன்) மிகும் காதல் அன்னத்தைக் கேளா இருந்திட்டான்.

கருத்து:—தன்னுள்ளே மிகுகின்றகாதலினால் நளன் வந்த அன்னத்தை ஒன்றும் கேட்கமாட்டாதவனாய் அதன் முகக்குறியைக் கருதிநோக்கி, "என்ன சொல்லுமோ இது, தமயந்தி தன்னை மணப்பதற்கு இணங்கினாளென்று சொல்லுமோ, அல்லது மறுத்துவிட்டாள் என்று சொல்லுமோ," என ஏங்கி அதன் வாய் பார்த்துச் சும்மா இருந்துவிட்டான்.

பதவுரை

கேளாரை - பகைவரை
வாளால் - (தன்) வாளினால்
விருந்து இட்ட-(கழுகிற்கு உடலையும் எமனுக்கு உயிரையும்) விருந்து செய்வித்த
மன் - மன்னனாகிய நளன்,
செல்வர் - பணக்காரர்களை
முன் - முதலிலே
இரந்து - ஒன்றை யாசித்து, (பிறகு அவர் என்ன சொல்வரோ என்று அவர்களது)
முகம் - முகக்குறியை
பார்த்து - கருதியும்
அருள் - (கண்ணின்) கருணையை
நோக்கி-கவனித்தும் (இவைகளால் அவர்களது)
அகம் - மனமானது
பார்க்கும் - (எவ்விதமாக இருக்கின்றதென்று) ஊகிக்க முயலும்

அற்றோரை - தரித்திரர்களை
போல - போல,
மிகும் - மிகுகின்ற
காதல் - காதலால்
அன்னத்தை - அன்னப்பறவையை
கேளா - (ஒன்றும்) கேட்காமல்
இருந்திட்டான் - இருந்துவிட்டான்.

குறிப்பு:—முன் 49-வதுசெய்யுள்முதல் இனிவரும் 53-வதுசெய்யுள்வரையிலும் இருக்கின்ற இவ்வைந்து செய்யுள்களும் மிகவும் அழகானவை. நளனுக்கும் அன்னத்திற்கும்இடையேசிறியதொருநாடகம்இங்கு நடைபெறுகின்றது. நளன் இருந்தநிலையும், அவனிருந்த நிலையிலிருப்பவர்கள் தன்மையும், காதலர்க்குத் தூதுபோகின்றவர்களதுகுணமும், இவைகளுக்குஎல்லாம் இணங்கக் கற்பனை செய்த கவியின் இருதயமும் யாவும் உய்த்து நாம் அறியாமற்போனால் அங்கு நிகழ்ந்தநாடகத்தை நம்மெதிரேகாணும்படி இந்தச் செய்யுள்களுக்குப் பொருள்கொள்ள மாட்டோம். முன் செய்யுளிற்கும் பின்செய்யுளிற்கும் பொருத்தம் இருக்கின்றதோ இல்லையோ என்றுகூடக் கருதாமல் பதத்துக்குப் பதம் ஒரு அர்த்தம் சொல்லிவிட்டுச் சுவையொன்றும் இச் செய்யுள்களில் காண நேராமற் போய்விடும். 53-வது செய்யுளின்கீழ் இந்நாடகத்தை வகுத்துக் காட்டுவேன்.

அன்னக் குலத்தி னரசே யழிகின்ற [ரைத்த
என்னுயிரை மீள வெனக்களித்தாய்—முன்னு
தேமொழிக்குத் தீதிலவே யென்றான் றிருந்தாரை
ஏமொழிக்கும் வேலா னெடுத்து 51

பதப்பிரிவு:—அன்னம் குலத்தின் அரசே அழிகின்ற என் உயிரை மீள எனக்கு அளித்தாய் (முன்) உரைத்த தேன் மொழிக்கு தீது இலவே என்றான் திருந்தாரை ஏம் ஒழிக்கும் வேலான் எடுத்து.

அன்வயம்:—திருந்தாரை ஏம் ஒழிக்கும் வேலான் "அன்னக் குலத்தின் அரசே, அழிகின்ற என்உயிரை மீள எனக்கு அளித்தாய். முன் உரைத்த உன் தேன் மொழிக்கு(இப்பொழுது) தீது இலவே" என்று எடுத்துச் சொன்னான்.

பதவுரை

திருந்தாரை - பகைவர்களை
ஏம் - செருக்கு
ஒழிக்கும் - அழிக்கின்ற
வேலான் - வேலாயுதத்தையுடைய நளன்,
" அன்னம் - அன்னங்களினது
குலத்து - குலத்திற்கு
அரசே - தலைவனே,
அழிகின்ற - சோர்கின்ற
என் - என்னுடைய
உயிரை - உயிரை
மீள - மறுபடியும்
எனக்கு - எனக்கு
அளித்தாய் - (நீ வந்ததாலேயே) கொடுத்தாய். கொண்டுவந்த வதந்தியை இன்னும் ஏன் கூற மாட்டே னென்கிறாய்.
முன் - (நீ போவதற்கு) முன்
உரைத்த - பேசிய
தேன் - உன் இனிமையான
மொழிக்கு - மொழிகளுக்கு
தீது - (இப்பொழுது ஒரு) கேடும்
இலவே - இல்லையே"
என்றான் எடுத்து - என்று உரத்துச் சொல்லினான்.

கருத்து:—நளன் ஒன்றும் கேட்காதிருக்க அன்னமும் ஒன்றும் சொல்லாதிருந்தது. 'உன் பேச்செல்லாம் போய்விட்டதா' என்று கோபித்தான்.

கொற்றவன்ற னேவலினாற் போயக் குலக்கொடிபால்
உற்றதுவு மாங்கவடா னுற்றதுவு—முற்று
மொழிந்ததே யன்ன மொழிகேட் டரசற்
கழிந்ததே யுள்ள வறிவு. 52

பதப்பிரிவு:—கொற்றவன்தன் ஏவலினால் போய் அ குலம் கொடிபால் உற்றதுவும் ஆங்கு அவள்தான் உற்றதுவும் முற்றும் மொழிந்ததே அன்னம் மொழி கேட்டு அரசற்கு அழிந்ததே உள்ள அறிவு.

பதவுரை.

கொற்றவன்தன் - நளராசனுடைய
ஏவலினால் - கட்டளைப்படி
போய் - (விதர்ப்பநாட்டிற்குப்)போய்
அ - அந்த
குலம் - சிறந்த குடியிற் பிறந்த [னிடத்தில்
கொடிபால் - பூங்கொடிபோன்ற தமயந்தியி
உற்றதுவும் - (தான்) சேர்ந்ததும்,
ஆங்கு - அவ்விடத்தில்
அவள்தான் - தமயந்தி [துச்) சேர்ந்ததும்
உற்றதுவும் - (தனியிடத்திற்குத் தன்னையழைத்
முற்றும் - (இவையனைய இடைநிகழ்ச்சி யாவையும்) ஒன்றுவிடாமல்
அன்னம் - அன்னப்பறவை
மொழிந்தது - சொல்லிக்கொண்டு வந்தது.
மொழி - இவ்வார்த்தையை
கேட்டு - கேட்கக் கேட்க
அரசனுக்கு - நளனுக்கு
உள்ள - இருந்த சிறிது
அறிவு - அறிவும்
அழிந்ததே - போய்விட்டதே.

கருத்து:—அரசன் கோபத்துடன் கேட்டதால் அன்னம் அதற்கு மாறாக அவனைச் சிறிது துன்புறுத்துதற்கு எண்ணி, முடிவைச் சொல்லாமல் முன்னிகழ்ந்த மற்றதெல்லாம் விரிவாகச் சொல்லிவரவே, அரசன் பொறுக்கமாட்டாமல் மனந்தளர்ந்து ஸ்மரணையற்றவனாயினான்.

கேட்ட செவிவழியே கேளா துணர்வோட
வோட்டை மனத்தோ டுயிர்தாங்கி—மீட்டுங்
குழியிற் படுகரிபோற் கோமான் கிடந்தான்
தழலிற் படுதளிர்போற் சாய்ந்து. 53

பதப்பிரிவு:—கேட்ட செவி வழியே கேளாது உணர்வு ஓட ஓட்டை மனத்தோடு உயிர் தாங்கி மீட்டும் குழியில் படு கரிபோல் கோமான் கிடந்தான் தழலில் படு தளிர்போல் சாய்ந்து.

அன்வயம்:—கோமான், கேட்ட செவிவழியே கேளாது உணர்வு ஓட ஓட்டை மனத்தோடு உயிர்தாங்கி, தழலில் படு தளிர்போல் சாய்ந்து குழியில் படு கரி போல் கிடந்தான்.

பதவுரை.

கோமான் - நளனானவன்
கேட்ட - (அன்னம் சொல்லிவந்த வார்த்தைகளைக்) கேட்டுக்கொண்டிருந்த
செவிவழியே - காதுகளின் வழியாகவே
கேளாது - முடிவு என்னவென்று கேட்பதற்கு முன்
உணர்வு - ஸ்மரணையானது
ஓட - ஓடிவிட
ஒட்டை - உடைந்துபோன
மனத்தோடு - மனதினோடு
உயிர்தாங்கி - உயிரைமாத்திரம் தாங்கினவனாய்
தழலில் - நெருப்பில்
படு - பட்ட
தளிர்போல் - தளிரைப்போல்
சாய்ந்து - வதங்கிச் சாய்ந்து
குழியில் - குழியிலே
படு - அகப்பட்ட
கரிபோல் - யானையைப்போல்
கிடந்தான் - விழுந்துகிடந்தான்.

கருத்து:—வேண்டாத வீண் வார்த்தைகளை அன்னம் சொல்லிவரவர அரசனுக்குப் பொறுக்கமாட்டாமல் மனமுடைந்து நினைவு அழிந்து எந்தக் காதைஇவ் வார்த்தைகள் துளைத்து வைத்தனவோ அந்த வழியாகவே ஸ்மரணை போய்விட, அன்னத்தின் முடிவுரையைக் கேட்பதற்குமுன் அவன் தரையிற் சாய்ந்துவிட்டான். இவன் நிலைகண்டு அன்னம் தன் விளையாட்டால் இவனைக்கொன்றே விட்டதோ என்று பயந்து பறந்துபோய்விட்டது.

விரிவுரை:—தமயந்தியின் செய்தியும் அவள்சுயம் வர ஏற்பாடுகளும்விதர்ப்பநகரில்அவ்வாறாக--49-வது செய்யுள்முதல், அன்னத்தின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நளனிடத்தில் மறுபடியும் நம்மை அழைத்துவந்து இங்கு நிகழ்ந்ததைக் கவி கூறுகின்றார். இச்செய்யுள்களுக்கு உரைகண்ட ஆசிரியர் அனைவரும், 'வந்த அன்னத்தை விஷயம் யாதென நளன் கேட்டானென்றும் அது, தமயந்தியும் இவன்மீது காதல்கொண்டுளள் என்று கூறியதென்றும், அதைக் கேட்டு அவன் மனஞ்சோர்ந்து பதைபதைத்து விழுந்தான் என்றும் பொருள் வரைந்துள்ளார். அந்த அர்த்தங்களும் சொல்லுக்கும் இலக்கணத்திற்கும் இணங்கும். எனினும், 'நளனும் முதலில்கேட்கவில்லை, அன்னமும் முடிவைச் சொல்லாமலே போய்விட்டது' என்று இங்குக்காட்டிய பொருள் நிகழ்ச்சியின் இபற்கைக்குப் பொருத்தமா யிருக்கலாம். அந்தப்பொருத்தத்தை அடுத்தபாடத்தில் விரிவாகக் காட்டுவேன்.

குன்றுடையானும் மக்களும்

[249-வது பக்கத் தொடர்ச்சி]

9. குன்றுடையான் மனைவி மகப்பேற்றின்பொருட்டுத் தவஞ்செய்து வரம்பெற்றது.

இனித் தாமரை, ஓமந்தூர்ப் பிராமணர்கள் சொன்ன வண்ணம், ஆயிரம் பரதேசிகளுக்கு அன்னதானஞ்செய்து தவத்துக்குப் போதல்வேண்டும்.

மறுநாள், தாமரை, ஆயிரம் பரதேசிகளுக்கு அரண்மனையில் அன்னமிடப்படும் எனத் தன்னூரிலும் அயலூர்களிலும் பறைசாற்றுவித்தாள். அன்று மத்தியானந்தொடங்கிப் பரதேசிகள் திரள்திரளாக அரண்மனையில் வந்து குவிந்தார்கள். அவள் அந்தியில், வந்த பரதேசிகளைக்கணக்கிட்டு ஆயிரம்பேர்வந்தனர் என்று மகிழ்ச்சியுற்று, அவர்களுக்குக் கால்முகஞ் சுத்திசெய்யத் தண்ணீர்கொடுத்து இலை போடச்சொன்னாள். வரிசையாய் உட்கார்ந்த பரதேசிகளைத் தாமரைநாச்சி மீண்டும் எண்ணிப்பார்க்கையில், தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதுபேர்மாத்திரம்இருக்கக்கண்டு, திடுக்கிட்டு, வேலைக்காரர்களையழைத்து, 'ஒரு பரதேசி குறைகின்றான். சுருக்காகப் போய் இன்னும் ஒரு பரதேசியை எங்கிருந்தாகிலும் தேடிக்கொண்டுவாருங்கள் என்றாள். வேலையாட்கள், 'தாயே, நாங்கள் தேடாத இடமில்லை. இந்த ஊரில் இனி யொருபரதேசியும் இல்லை; இருந்தவர்களையெல்லாம் நாங்கள் கொண்டு வந்து விட்டோம்' என்றார்கள்.

தாமரை தன் கைகளைப்பிசைந்துகொண்டு வீட்டை விட்டு வெளியேவந்து தெருத்தெருவாய்த் தேடினாள்; கோவிலிலும் குளக்கரையிலும் சாவடியிலும் சத்திரத்திலும் தேடினாள். பயனில்லை அவள், 'செல்லாண்டியம்மையே, இதுவும் உன் திருவிளையாடலோ! ஆயிரம் பேருக்கு அன்னமிடுவேன் என்று சொல்லிய என் சொல் தவறுவேனோ? என் தாயே! எப்படியாயினும் இன்னும் ஒரு பரதேசியை அனுப்பு' என்று குலதெய்வத்தை நினைந்து தொழுது, ஊரின் புறத்தே உள்ள ஒரு பாழ்பட்ட பிள்ளையார்கோவிலை யடைந்தாள்.

அங்கே, கால்நொண்டி கைநொண்டியாய் உட்கார்ந்திருந்தஒருமுடச்சாமியாரைக்கண்டாள். அவர்உடம்பு முழுதும் புண்மயமாய் இருந்தது. அப்புண்களினின்று சீயும் இரத்தமும் இடைவிடாதுசொரிந்தன; முடைநாற்றம் வீசிற்று. தாமரை அவரை யணுகி, 'தாங்கள் கிருபைகூர்ந்து, என் வீட்டுக் கெழுந்தருளி, அமுது கொண்டு என்னைக் கடைக்கணிக்கவேண்டும்' என்று குறையிரந்தாள். சாமியாரோ அவளைப் பார்த்தவரும் அல்லர், வாய்திறந்து ஒரு வார்த்தை பேசினவரும் அல்லர், தாமரை அவர் முன்னிலையில் மண்டியிட்டு, 'சுவாமி, தாங்கள் என்னைப் பாராமலும் என்னோடு பேசாமலும் வாராமலும் இவ்வாறுவாதுசெய்வீர்களாயின், நான் இவ்விடத்தைவிட்டு நகரேன்' என்று சொல்லி யழுதாள். சாமியார் ஏறிட்டுப்பார்க்கவுமில்லை, ஏனென்று கேட்கவுமில்லை.

தாமரை அரண்மனையை நீங்கி மூன்று நாழிகைகள் சென்றன. பரதேசிகள் இலையில் உட்கார்ந்து சாப்பிடாமல் காத்திருப்பார்கள்என்ற நினைவு வந்தவுடன், அவள் எழுந்திருந்து, முடச்சாமியாரைத் தன்னோடு வரும்படி பலவாறு இரந்தும் அவர் எழுந்திராமையால், ஒரு குழந்தையை எடுப்பதுபோல் அவரை யெடுத்துத் தன் தோள்மேற் போட்டு, அரண்மனையை நோக்கி நடந்தாள். அவள் பாதிவழி செல்லவே, குழந்தை

எடையிருந்த சாமியார் ஆள் எடையானார். சுமக்க முடியாமல் அவள் கால்கள் தடுமாறின; அவள் உயிர்த்தலும் அரிதாயிற்று. சாமியாரைக் கீழே விடாமல் தாமரை மெல்லமெல்ல நகர்ந்தாள். அவள் பின்னுஞ் சிறிதுதூரஞ் செல்லுதலும் சாமியாரின் எடை ஒரு குழந்தையின் எடையினும் குறைவுபட்டது. அவள்வியப்புற்று, அவரைச் சுமந்துசென்று, விளக்குவைத்து இரண்டு நாழிகையானபின் தன் வீடுசேர்ந்து, பந்தலில் இறக்கி, இலைபோட்டாள்.

ஆயிரம் பரதேசிகளுக்கும் சோறு கறி பரிமாறினார்கள். பரதேசிகள் எல்லோரும் உண்ணத்தொடங்கு முன் வாழ்த்துக் கூறிச் சங்கநாதஞ் செய்தார்கள். நமது சாமியாருக்குச் சங்கு இல்லாமையால், அவர் தமது முடக்கையை மடித்துச் சங்கநாதஞ் செய்து, தாமரையைத் தம்பக்கலுக் கழைத்து, மூன்றிலையேந்தச்செய்து, மூன்றுபிடி சோறுபோட்டு, 'இதைச்சாப்பிடு; உனக்குப் பிள்ளைவரம் கிடைக்கும்; தெற்கே திருவாலவாயான் சந்நிதிக்கு வா' என்று இதுவரையிலும் பேசாதவர் இப்பொழுது வாய்திறந்து சொன்னார். தாமரை தொழுதுவாங்கி, பரதேசிகள் அமுதுண்கையில் மறைவாகச்சென்று, சாமியார் கொடுத்தசோற்றை யுண்டு, அப்பொழுதே பிள்ளைப்பேறு பெற்றவள் போல மகிழ்ந்து, முடச்சாமியார் இருந்த இடத்துக்கு வந்தாள். சாமியார் அங்கே இல்லை, மறைந்துபோனார்.

தாமரை, அவரைக் காணாது தேம்பித்தேம்பி யழுதாள். குன்றுடையான், 'தாமரை, எல்லாம் கடவுள் செயல்; நமக்கு இவ்வளவு செய்தவர், இனி நம்மைக் கைவிடுவாரா. ஒன்றுக்கும் அஞ்சாதே' என்று மனைவிக்குத் தேறுதல் சொன்னான்.

மூன்று நாட்களுக்குப்பின் குன்றுடையாக்கவுண்டன், மனைவி சொற்படி உலுப்பையோடு உறையூரை அடைந்து, சோழமன்னரைக்கண்டு தலைவணங்கி நின்று, 'சுவாமி' நானும் என் மனையாளும் மகப்பேற்றின்பொருட்டுத்தவஞ்செய்யப்போகின்றோம். நாங்கள் திரும்பிவருமளவும் தாங்கள் கொடுத்த கணக்கு மணியங்களையும், பட்டயத்தையும், காடு கரைகளையும் தங்களிடம் ஒப்படைக்கவந்தேன். அவற்றைப் பெற்றுக்கொள்ளப் பிரார்த்திக்கிறேன்' என்றான். அரசரும் சம்மதித்து, அவன் கைச்சாத்துபெற்று, 'கவுண்டா, நீயும் உன் மனைவியும் உத்தமர்கள். உங்களுக்குக் கடவுள் அருள்புரிவார். நீ ஊருக்குத் திரும்பி வந்தவுடன் இவற்றை மீட்டுக்கொள்ளலாம், போய்வா" என்று விடைகொடுத்தார்.

குன்றுடையான் சிற்றூலைப்பட்டணத்துக்குத் திரும்பிவந்து, சேவகர்களையும் தாதியர்களையும் கூப்பிட்டு அவர்களுக்குப் பத்துவருடக் கணக்குத் தீர்த்து, வீடு வாசல்களைப் பார்த்துக்கொள்ளும்படி உத்தரவிட்டான். மறுநாள் திங்கட்கிழமை, கணவனும் மனைவியும் பிள்ளையார்கோவிலுக்குச் சென்று, சாமி கும்பிட்டுத் தான தர்மங்கள் செய்து, வீடு சேர்ந்து, வீடு வாசல்களைப் பூட்டி, ஊராரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டனர்.

தாமரைநாச்சி வாசலைக் கடந்து போகையில் அங்கே படுத்திருந்த அவளுடைய மலட்டுப் பன்றி எழுந்து ஓடிவந்து குறுக்கிட்டது. பன்றி குறுக்கிடுதல் கெட்ட நிமித்தம் என்றெண்ணித் தாமரை கொதிப்புற்று, தன் இடதுகாலால் அதை உதைத்தாள். பன்றி வீறிட்டோடி, தாமரைக்குமுன் சிறிது தூரத்தில் உட்கார்ந்து அவளை நோக்கினமை, 'ஏ! தாமரை, பிள்ளைப்பேற்றின் பொருட்டுத் தவஞ்செய்யப்போகிறாய்; எனக்கும் ஒரு குட்டிக்குவரம் வாங்கிக்கொடுப்பாய் என்றெண்ணி, உன்னிடம் ஓடிவந்தேன். நீயென்னைச் சிறிதும் பொருட்படுத்தாது பலர் முன்னிலையில் காலால் உதைத்தாய். நான் சோழனூரில் இராசபன்றிக்குப் பிறந்தது உண்மையாயின், பழிக்குப்பழிவாங்காமல் விடேன்' என்று சொல்வது போன்றிருந்தது.

தாமரை தன்னைக் கடந்து செல்லுதலும், அப்பன்றி அக்கணமே புறப்பட்டு, பொன்வளநாட்டுக்கும் கொங்குநாட்டு வேடுவர் சீமைக்கும் எல்லையாயிருந்த வீரமலையையும் வையமலையையும் தாண்டி, வேடுவர் வசிக்கின்ற தலையூரையடைந்து, வேட்டுவமன்னன் தங்கை வீரதங்காள் பக்கலில் ஓடிவந்து, அவள்காலில் வீழ்ந்து புரண்டது. வீரதங்காள் அதற்கு ஆதரவுகூறி, பக்கத்திலிருந்தவர்களால் அதன் வரலாறு கேட்டறிந்து, அதை அன்போடு வளர்த்துவந்தாள். இது நிற்க;

குன்றுடையானும் அவன் மனைவியும் மந்தை கடந்து, எல்லைகடந்து, தெற்குநோக்கிச் சென்று, கடவுளே கதியெனத் திருவாலவாயானையும் செல்லாண்டியம்மனையும் துதித்துக்கொண்டே வழிநடந்தனர். உச்சி உருமத்தில் தோப்புந் துரவுங் கண்டவிடத்தில் தங்கி யிளைப்பாறினர்; மீண்டும் நடந்து ஒரு சிற்றூரிலாயினும், சாவடி சத்திரங்களிலாயினும் தங்கி இரவைப் போக்கினர். இவ்வாறு செல்கையில் சில இடங்களில் வழிப்போக்கர்கள் துணையாயினர்; சில இடங்களில் பொதிமாடுகளின்மீது சரக்கேற்றிச்செல்லும் வாணிகர் துணையாயினர்; மரமடர்ந்த காடுகளில் காட்டு விலங்குகளும்பறவைகளும் துணையாயினை; எங்கும், இறைவன் தோன்றாத் துணையாயினான். சில இடங்ளில் வழிமுழுதும் கற்களும் முட்களும் நிரம்பியிருந்தமையால், தாமரையின் அடிகள் புண்பட்டன; முட்செடிகள் அவளது துகிலையும் கூந்தலையும் பற்றியிழுத்தன. கணவனும் மனைவியும் கைகோத்து, ஒருவர்க்கொருவர் ஆறுதல் சொல்லி, என்றும் கடவுளை மறவாத சிந்தையினராய் ஆறுநாள் நடந்தனர்.

ஏழாம்நாட் காலையில், மதுரைக்கு வடக்கே ஒருகாததூரத்தில் குன்றுகளடர்ந்த ஒருகாட்டை யடைந்தனர். அங்கே, ஓர் அருவி சலசலவென்று ஓடிற்று. ஓங்கிவளர்ந்தமரங்கள் மாசற்ற வானத்தை நோக்கிநின்றன. அம்மரங்களிலிருந்த பறவைகள் மிகவும் இனிமையாய்ப் பாடின. பறவைகளின் ஒலியும் அருவியின் ஒலியும் தம்முட்கலந்து மனத்துக்குக் களிப்பை யுண்டாக்கின. பசிய மரக்கிளைகள் பனித்துளிகளை யுதிர்த்துக் காலைவெய்யிலில் மிளிர்ந்தன.

சிறிது தூரத்திலே, அவ்வருவியின் கரையிலே, ஓர் ஆலமரத்தின் அடியிலே, ஒரு பிள்ளையார்கோவிலைக் கண்டு, கணவனும் மனைவியும் அங்குச் சென்று உட்கார்ந்தனர். அவ்வேளையில், அக்கோவிலுக்குப் பூசை செய்யும் பண்டாரம், குளித்து முழுகித் திருநீறு தரித்து, பூக்குடலை பழம் பூசைத்தட்டு முதலியவற்றைச் சுமந்துவந்து, கோவிற்கதவு திறக்கையில், குன்றுடையானையும் மனைவியையும் கண்டு, 'உங்கள் ஊர் எது, எங்கே போகிறீர்கள்?' என்றுவினவினான். குன்றுடையான், 'அப்பா பண்டாரம், நாங்கள் இருப்பது பொன்னுவளநாட்டிலுள்ள சிற்றூலைப்பட்டணம். என்பெயர் குன்றுடையாக்கவுண்டன்; இவள் என்னுடை மனைவி, தாமரை. கடவுளருளால் எங்களுக்குச் சோற்றுக்

கும் துணிக்கும் குறைவில்லை. ஆயினும், எங்களுக்குக் குழந்தையில்லை.சொக்கநாதர் சந்நிதியில்தவங்கிடந்து, பிள்ளைவரம்பெற எண்ணி, மதுரைக்குப் போகிறோம்' என்றான். பண்டாரம், 'நீங்கள் உங்கள்நாட்டிலிருந்து இவ்வளவுதூரம் இடையூறில்லாமல் நடந்துவந்தது பெரியகாரியம். உங்கள் முகங்களைப் பார்த்தால், நீங்கள் பெரியகுடியைச் சேர்ந்தவர்கள் என்பது நன்றாய் விளங்குகிறது. மதுரை பக்கத்தில்தான் இருக்கிறது. உங்கள் கோரிக்கை நிறைவேறவேண்டும் என்று குளித்துவந்து சாமிகும்பிடுங்கள்' என்றுசொல்லிப் பூசைக்கு ஆயத்தஞ் செய்தான்.

கணவனும் மனைவியும் அவ்வாறே நீராடித், திருநீறணிந்து சாம்பிராணித்தூபம் காற்றிற்கலந்து நறுமணம் வீச, பண்டாரம் கணகணவென மணியடித்துத் தீபாராதனை செய்ய, சாமி கும்பிட்டனர்.

பின்பு கணவனும் மனைவியும் கோவிலுக்கு முன்புறத்திலிருந்த ஒரு மரநிழலில் உட்கார்ந்தனர். பண்டாரமும் பூசைமுடித்து, அவர்கள் பக்கலில் வந்து உட்கார்ந்தான். தாமரை கணவனை நோக்கி, மதுரையை நெருங்கிவிட்டோம். இனி, நீங்கள் வரக்கூடாது. நீங்கள் கிழப்பருவத்தாலும் நெடுந்தூரம் வழிநடந்ததாலும்மிகவும் களைப்புற்றிருக்கிறீர்கள்.உடம்புமெலிந்திருக்கின்றமையால் தவஞ்செய்ய இயலாது'என்றாள். அதுகேட்டுக் குன்றுடையான், நான் எங்கே இருப்பேன் ; எனக்குத் துணை யார்? உன்னைப்பிரிந்து நான் எப்படிக் காலங்கழிப்பேன்?''என்று சொல்லி, நைந்து அழுதான். தாமரையும் கண்ணீர்உதிர்ப்பதைக்கண்டு, பண்டாரம், 'அம்மா, அழாதீர்கள். நீங்கள் திரும்பி வரும்வரையிலும் கவுண்டர் இங்கேயேஇருக்கட்டும். நான் பார்த்துக்கொள்கிறேன். இந்தக் கோவிலுக்குப் பின்புறத்தில் இருக்கிற கல்மண்டபத்தில் கவுண்டர் தங்கியிருந்தால், காட்டு மிருகங்களால் எத்தீங்கும் நேரிடாது' என்றான்.

பண்டாரம் சொன்னதைக்கேட்டுத் தாமரை அளவுகடந்த மகிழ்ச்சியடைந்து, 'நல்லது, பண்டாரம், நீ இந்த உதவிசெய்தால், நாங்கள் உயிருள்ள அளவும் உன்னை மறக்க மாட்டோம். நான் திரும்பி வரும்வரையில் கவுண்டருக்கு வேளை தவறாமல் சாப்பாடு கொடு'' என்று சொல்லி, ஆயிரம்பொன் கொண்ட ஒரு பொன்முடிப்பை அவனுக்குக் கொடுத்து, தன் கணவனை அவன்கையில் ஒப்புவித்து, கணவனுடைய அடிபணிந்து, ஆசிபெற்று, செல்லாண்டியம்மனை நினைந்து, கண்ணீர்சொரிந்து தெற்குநோக்கிச் சென்றாள்

இங்கே குன்றுடையான் பண்டாரத்தின் துணைபெற்றுச் சோற்றுக்கு முட்டுப்படாமல் மண்டபத்தில் குடியிருந்து, நாள்தோறும் குளித்துச் சாமி கும்பிட்டு மனைவியின் கோரிக்கை முற்றுப்பெறவேண்டும் என்று தவங்கிடந்து, காலங்தள்ளினான்.

தாமரைநாச்சி,காடுகடந்து, மலைகடந்து, கொடுவழி கடந்து சென்று, மாலைப்பொழுதில் வைகைக்கரையடைந்தாள். அங்கே, பலர் தவம்புரியும் ஒரு வனத்திலே, சந்தனப் பொய்கைக்குப் பக்கத்திலே, மறைவான ஓரிடம்வகுத்து, பொன்னாற்செய்த தவக்கம்பம் நட்டு, பொற்கும்பத்தில் தீவளர்த்துப் பொன்னூசி நிறுத்தி,அங்கயற்க ணம்மையின் சந்நிதியை நோக்கிய வண்ணமாய் உட்கார்ந்து சிவசிவ என்று திருநீறணிந்து, மகப்பேற்றைக் குறித்துத் தவஞ்செய்தாள்.

தாமரை தன் வீட்டை மறந்து, காட்டை மறந்து, கணவனை மறந்து, தன்னையும் மறந்து அருந்தவம் புரிந்தாள். அவள் சடை நிலத்தில் வீழ்ந்து வேரூன்றிற்று. அவள் இருந்த இடத்தில் கறையான் புற்றெடுத்தது; புல் வளர்ந்தது. அவளைச் சூழ்ந்து கழற்சிச் செடிகள் பூத்தமலரும் காய்த்துக் குலுங்கின. குயிலும் பூவையும் அவளை யணுகிச் சிந்து பாடின.

இவ்வாறு தாமரை தவஞ்செய்கின்ற நாளிலே, அவளுற்ற இடர்கள் பல. அவ்வனத்திலுள்ள பேய்களும் சடாமுனிகளும் அவளை அச்சுறுத்தின; காட்டு யானைகள் காலால் மிதிக்க வந்தன. செந்தும்பி, கருந்தும்பி கொட்டின. காலவேறுபாட்டிற் கேற்ப, வெய்யிலும் மழையும் பனியும் காற்றும் வருத்தின. அவள் ஒன்றுக்கும் அஞ்சாமல், திருவாலவாயானையும் அங்கயற்கணம்மையையும் நினைந்த சிந்தையினளாய்ப் பத்து வருடம் தவங்கிடந்தாள்.

பத்தாம் ஆண்டின் இறுதியில், தாமரை கண்மூடித் தவத்திலிருக்கையில், ஒருநாள், ஆகாயவெளியிலேஓர் புதிய ஒளியைக்கண்டு, உடம்பு வியர்க்க, மயிர் சிலிர்க்க, அவ்வொளி தோன்றிய திசையிலே உற்று நோக்கினாள். சோமசுந்தரக் கடவுளும் அங்கயற்கணம்மையும் இடபாரூடர்களாய்த் ''தோன்றி, புன்னகை புரிந்து, அவளைக் கையமர்த்தி, மகிழ்ந்தோம், உனக்கு யாது வேண்டும்?' என்றனர். தாமரை அவர்கள் அடியிணைகளில் வீழ்ந்தெழுந்து துதித்து, தழுதழுத்த குரலிலே, 'அப்பனே, அம்மையே, அடியாளை மலடி மலடி யென்று வையகம் ஏசுகின்றது. எனக்கு மண்ணுக்கு இரண்டு ஆணும், மனைக்கு ஒரு பெண்ணும் அருள்செய்யவேண்டும்' என்று இரந்தாள். திருவாலவாயான், 'உனக்கு, நூறு வயதளவும் வாழக்கூடிய பிள்ளைகள் வேண்டுமா, பதினாறு வயதளவு மாத்திரம் வாழ்ந்து புகழ்படைக்கும் வீரக்குழந்தைகள் வேண்டுமா?' என்று வினவுதலும் தாமரை, சிறிது சிந்தித்து 'அருட்பெருங்கடலே, உலகம்போற்றும் வீரமக்களே எனக்கு வேண்டும்' என்றாள். சோமசுந்தரக் கடவுள், 'நீ கோரியபடியே வீரம் பொருந்திய புதல்வர் இருவரை உனக்கருளினோம்' என்று திருவாய் மலர்ந்தருளினர். அங்கயற்கணம்மை தாமரையை நோக்கி, 'உனக்கொரு பெண் பிறப்பாள். அவள் என் அமிசத்தோடு கூடியவளாய் வீர கன்னியாய் விளங்குவாள்' என்று அருளினர். தாமரை ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, சிரத்தின்மேற் கைகளைக்குவித்து, 'என்னையாட்கொண்ட, அப்பனே என் அம்மையே, என்னடிமைப் பறைச்சியும் என்னைப்போலவே மலடியாயிருக்கின்றாள். அவளுக்கும் ஒரு புதல்வனை அருளவேண்டும்' என்று சொல்லிவணங்கினாள். 'அவளுக்கும் ஒரு புதல்வனுக்கு வரங்கொடுத்தோம். அவனும் உன் மக்களைப்போலவே வீரனாவான். உன்னைச் சார்ந்தோரும் மலடு நீங்கப்பெறுவர்' என்றருளி, மறுகணத்தில் கண்கூசும் பெரிய ஒளித்திரளிலே, ஆகாய வெளியிலே, அம்மையும் அப்பனும் மறைந்தனர்.

தாமரைநாச்சி கண்திறந்து, தான் கண்டது கனவோ, நனவோ என்று சிறிது ஐயுற்று, பின்பு தேறி, களிப்பெனுங் கடலில் ஆழ்ந்து, கடவுளர் மறைந்த திக்கைநோக்கித் தெண்டனிட்டு, எதிரிலிருந்த திருவாலவாயான் திருக்கோயிலை நோக்கிக் கண்களில் நீர் சொரிய ஆடிப்பாடினாள். பின்னர்த் தன்தவத்தைக் கலைத்துக் கணவனை நாடிச்சென்றாள்.

தன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த கணவனை யடைந்து தாமரை, அடிபணிந்து, தான் வரம்பெற்ற வரலாற்றைக் கூறினாள். குன்றுடையான் அதுகேட்டு மகிழ்ச்சியுற்றான். கணவனும் மனைவியும் பண்டாரத்துக்குத் தகுந்த வரிசை வழங்கி, மறுநாட் காலையில் புறப்பட்டு, வந்தவழியே சென்று, சிற்றூலைப்பட்டணத்தை யணுகினர். அவ்வூர்க்குடிகள் கொட்டுமுழக் கோடுவந்து, அவர்களை எதிர்கொண்டழைத்துப்போய் உபசரித்தார்கள்.

இதற்கிடையில், உறையூரிலே,சிவசோழ மகாராசர் சிவபதமடைந்தமையால், அவருடைய புதல்வர் மூவரில் மூத்தவர் அரசரானார்; தம்பிமார் இருவரும் இளவரசராய்த் தம்தமையன் பக்கலிலிருந்து துணைபுரிந்தனர்.

மூன்றுநாட் கழிந்தபின், குன்றுடையான் உறையூருக்குச்சென்று, சோழமன்னரைக் கண்டு பணிந்து, தானும் தன் மனைவியும் தவஞ்செய்து வரம்பெற்று வந்த வரலாற்றைவிண்ணப்பித்தான்.சோழமன்னர்கள் கேட்டுக் களிப்புற்று, அவனுடைய கணக்குமணியங்களைத் திருப்பிக்கொடுத்ததுமன்றி, அவனைப் பொன் வளநாட்டுக் குறுநிலமன்னனாக்கி, மாதம் ஒருமுறை கப்பங்கட்டும்படி பணித்து, பட்டயமும் மேழிக் கொடியும் விருதுகளும் அளித்து, சிவிகையில் ஏற்றி, சிறுபடைசூழச் சிற்றூலைப்பட்டணத்துக்கு அனுப்பினார்கள்.

முதற் புத்தகம் முற்றிற்று.

ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்

[252-வது பக்கத் தொடர்ச்சி]

காப்பு

வெண்பா

இருமைக்கு நன்மை யியம்புகேன் செய்ய
ஒருமைக் கிசைநீ யுளமே—பெருமைமுகில்
வண்ணக் கருமணியை வைகுந்த நாதனையே
யெண்ணக் கருதி யிரு.

காப்புப் பருவம்

திருமால்

பொன்பூத்த பங்கயப் பஞ்சரப்
பூங்கிளி புனத்துழாய் மலர்வனத்துப்
போந்துவிளை யாடச்செழும் பற்பராகம்
புனைந்தவிள வெய்யில் காட்ட
மின்பூத்த முத்தாரம் வெண்ணிலவெ
றிப்பமணி மெய்யிந்திர நீலமேய்ப்ப
வெண்ணெய்ப் பதிக்குள்வாழ் வைகுந்தநாதனை
விருப்பமொடு வந்து காக்க
கொன்பூத்த சங்காழி சிலைதண்டுவாள்
செங்கைகொண்டமை குறிப்புணர்த்தக்
கோகனக நாண்மலர்ச் சேயரிக்கட்கடைக்
கூர்கருணை கொண்டு கொப்பூழ்
முன்பூத்த அகிலாண்ட முற்றுந்தழைப்ப
வாண்முதிர் பரந்தாம மேவி
முத்திக்கு வித்தாகி யத்திக்கு முற்றோன்று
முழுமுதற் பச்சை முகிலே. 1.

வேறு

திருமகள்

தத்துறு தரங்கமெறி முத்தநிலவின் கதிர்த
ரச்சுடர் பெறுஞ்சலதி ராசனருள் மாமகள்
தத்தையின மென்குதலை மைத்தகு மூல்கெண்டைவிழி
சற்றென நுடங்குமிடை யாள்கனக மேனியாள்
பத்துறு தொழும்பர்தன்வி ழிக்கடையி னின்பமவர்
பற்றவருளிந்திரைகு ணகரிம ணேகரி
பற்பமெ னுமம்பொன்மல ரிட்டத விசின்கண்வளர்
பச்சைம யில்செங்கமலப் பாதமுடி சூடுவாம்
கத்துரு வின்மைந்தரிடை புத்தமு துகந்தவர்க
ளைப்பணி யெனும்படிசெய் நீள்பறவை வாகனர்
கற்பமொ ருசெங்கைகொடி யொப்பவு ணருந்துயில்க
ருத்தும கிழுங்கருணை மால்பரம தேவனர்
வித்துரு மமென்றவித ழிற்கழை யிசைந்திசைவி
ரித்தருள் முகுந்தர்நவ நீதிபுரி நாயகர்
விற்பணி லநந்தகமெ மூத்திகி ரிகொண்டபுய
வெற்பினி சைசந்ததமும் ஓதுதமிழ் வாழ்கவே.

வேறு

நான்முகன்

செங்கமல மிசைதோன்றி வெண்கமல
மங்கையைச்சேர்ந்து மறைநான்கு முறையுந்
திருவதனம் நான்குபெற் றெண்கரம்
வருந்தவெண் டிசைகள் புவிபதினு லுயிர்த்
தங்கமல நாகபதி நால்வாய்மதக்
களிறமைத்துச் சுமக்க வைத்தோ
ரண்டமாமிவ் வாறனேகாண்ட கோடிசெயு
மந்தணனை வந்தனை செய்வாம்
சங்கமல வெள்ளையம்புய மலர்த்திங்களோ
தனியிவை யனந்த மென்னத்
தவளநிற மென்பவள வாய்ப்பொலன்
சிறையனந்தத் திவிளையாடு பொய்கை
யுங்கமல வயலுநிறை நாடுசூழ்வெண்
ணெய்நக ருத்தமனை மத்த மாவுக்
குதவிபுரி கொண்டலைத் தொண்டருக்
கெளியனை யுரைத்தமுத் தமிழ்தழைபவே 3.

வேறு

நாமகள்

ஓதுமறைப்புத்தகமு நாதமிகுத்திட்டமுதமூறுமிசைக்
குத்தகுமி யாழுமலர்க் கைக்குளுளாள்
ஒடரிமைக் கட்குவளை போனுமிடைக் கட்கடையி
னூமனும்வித் தைக்குரிய ளுகவாத் தைத்தருவாள்
மூதுணர்விற்குக்கமல நான்முகனுக்குத் தலைவிமூரன்
முகத்துத்தமபி ராமிமதிக்கொத்தமெயாள்
மூடர்மனத் துக்கணுகாள் பாரதிசுப் ரக்கமல மூல
மணிப்பொற்றவிசின் வாணிபதத் தைப்பணிவாம்
மாதுலன்விட்டிட்டமத வேழமருப்பிற்றுவிழ வாண்
மலர்பட் டேப்புரள வோரறைவைத் திட்டவனை
மாதவனைத் துட்டமிகும் வாலியுரத்தைப்பகிரும்
வாளியனைச் சத்தமிகும் வாரிதியிற் கற்கொடொரு
சேதுவினைக் கட்டியெவர் காணினுமுற் பெற்றவினை
தீரவரத்தைத்தருமி ராகவனைக் கற்றவர்கள்
தேடுசிறப் பிற்பெருகும் வேணுவனத்திற் குடிகொள்
சீதரனைச் செப்புமிசை சேர்தமிழ் முற்றுப்பெறவே.

வேறு

பரமசிவன்

பவளம் பழுத்த திருமேனி பாதி
பசப்பச் சடாடவியிற்
பசும்பொன் னிதழிக் கரும் பாந்தள்
பணிவெண் பிறைதன்னிறம் விரிப்பத்
தவளம்படர் நீறணிமிடற்றிற் றடஞ்சேர்
குவளை நிறங்காட்டச்
சரணந் துதிப்பாற் கெவ்வணமுந் தன்பாற்
றெரிப்பான் பதந்துதிப்பாம்
கவளங்குதட்டும் பெருங்கவுட்டுக்
கரடக்களிற்றுக் கருள்பெருமான்
கயல்பாய் தடமுஞ் செழுஞ்செந்நெற்
கதிரார்வயலு முபவனமுந்
திவளம்புலியைத் தொடவுயர்ந்த செம்பொன்
மதிலுந் தடந்தெருவுஞ்
செழிக்கும் வெண்ணெய்க் கதிபனிசை
சேருந் தமிழ்ப்பா தழைத்திடவே. 5.

———

வேறு

பார்வதி

இமையநெடுமுடி துகினவுருவரை
யிறைவன் மகளென எய்துங்குமாரியை
இலகுமிரசித வரையின்முடிவள
ரெழில்கொடுகிர்மலை மெய்கொண்ட தேவியை
எதிருமடலுடை மயிடனெடுமுடி
யிடறிநடமிடு மெய்கொண்ட நீலியை
இணையில் குறமகள் களபமுலையுழு
தெழு பனிருபுய வைதந்த வேலனும்
அமையுமதமழை யொழுகுபுகர்முக
வவனுமகனென வைகும் பவானியை
அவிருமடமயி லியலும்வடிவமு
மடியர் தொழவருள் செய்சிங்கவூர்தியை
அரவினணைமிசை வளருமவனிணை
யவளை யிமையவர் கொய்கின்றதேமலர்
அடியினனிசொரி தரநல்வரமருள்
பவளை மனமொழி மெய்கொண்டு தொழுதும்
கமையினிருதர் பொனகரிலழலிடு
கவியினிடமருள் செய்கஞ்சலோசனர்
கடலினழலெழ உலகுகுலையவொர்
கணையைவிடவளை வெய்துஞ்சராசனர்
கடியஅமரினி லலசுதசமுக
கடிகொணர்புகு துய்கென்றவாசகர்
கமலமடமகள் களபமுலையுழு
கதிர்கொள் மணிவெயில் செய்துங்கமார்பினர்
சமையகலகியர் அலையவெகுவித
சரிதையி னின்மரு ளெய்தும்புராதனர்
சகடுபொடிபட வுதையும்வனருக
சரண மறைமுடி வைகும்பராபரர்
தருணமணியொளிர் திகிரிவனநகர்
தமது மனமகிழ் வைகுந்த நாயகர்
தருதெளமுதினு மினியபுகழ்சிறு
தகையவெனதமிழ் செய்புன்சொல் வாழ்கவே6.

———

வேறு

முருகர்

மாவலந் தவிரவுயர் வெற்பகம் பிளவுபட
வற்றுத வவுண வெள்ள
மாக்கடற் படைசுவற வடிவேல் கரத்தேந்தி
மயில்வ யப்பரி நடாத்துஞ்
சேவலங் கொடியனைச் சேவலோன்
புதல்வனைத் தேவசேனைக் கதிபனைச்
சேல்விழிக் குறமகள் மணாளனைத் தாளிணை
தினந்துதித் தன்பு புரிவாம்
நாவலந் தீவிடைச் செங்கோல் செலுத்துமுடி
நரபாலர் குழுவை வெவ்வாய்
நவிரப்ப டைக்கலத் திருபத்தொர் காலட்டு
நதிபடுங் குருதி தேக்கிக்
கேவலம் புகுதந்தை கடனாற்றி மகிழ்வெய்து
கிளர்தவத்தவனை வெண்ணெய்க்
கேசவனை வைகுந்த நாதனைப் பரவுமென்
கேண்மை முத்தமிழ் தழையவே. 7.

———

வேறு

இந்திரன்

ஒருநாலு நுதிமுனை மருப்புறு களிற்றனை
யுயர்வானிலுல விருசிறைக் கருமலைக்குல
முலகூடு படிதர வறுத்த வயிரத்தனை
யொருநூறு பெருமக முடித்தருள் சிறப்பனை
அருண்மீறு கமலவிழி பற்பல வுளத்தினை
யயிராணி யிணைமுலை திளைத்த புயவெற்பனை
அமராடு மவுணவிருளைத் தெறுவிதத்தினை
யலர்தூவி யிருபதம் விருப்புடன் வழுத்துவாம்
கருநாரை வயலுறு கயற்களை யெடுக்கவுங்
கடைமாதர் குவளை கமலக்களை யெடுக்கவுங்
கனிவான பழமுடை மதுப்புனல் பெருக்கவுங்
கதிர்மீறிவளர்செந்நெலின்முத்துதிர்வளத்தவாய
நரர்நாலு வருணரு மகிழ்ச்சியின் மிகுத்தசீர்
நவநீத புரிமுன ரியற்றிய தவத்தினால்
நலமாக வுறைதிரு மகட்குரிய கர்த்தனார்
நயமேவுமிசை மொழியியற்றமிழ் தழைக்கவே8.

———

வேறு

சத்தமாதர்

சங்காழி கொண்டவுருவொன்று மழுமான்
வைத்த சடிலமொன்ற முதகரகங்
தாங்கும்படிவொன்று வயிரப்படை கரத்தேந்து
தனுவொன்று வடியெயிற்றிற்
பொங்காழி வுலகந்தரித்த தாபரமொன்று
பொருமயில் சுமந்ததொன்று
புணர்கபாலங் கொளுமுடம்பொன்று
பெறுமாதர் பொன்னடிகள் சென்னிவைப்பாம்
அங்காழிலங்குகவி னல்குன்மென்
கொடியிடை யலத்தகச் செஞ்சீறடி
யாரமுலை மைக்குழற் பிறைநுதற்று
வரிதழமைத் தடந்தோளிடைமினார்
கொங்காழிணைக்கமல மன்கைப்பிணைத்தாடு
குழகனைப் புவியனைத்துங்
கொண்டாடும் வைகுந்த நாதனைத்
தொண்டனேன் கூறுமுத் தமிழ்தழையவே. 9.

———

வேறு

முப்பத்து மூவர்

கருநிற நெட்டுட லெருமை மதுச்சொரி
கமல முழக்கியு மென்மலரார்
கடிகமழ் மைச்சிறு குவளைகறித்தடர்
கதிர்பசை பற்றிய செங்கெலுறு
திருபுற முத்தமு தொழுகு மதக்களி
றெனவுல வப்பெறு வெண்ணெயில்வா
ழிமையவ ருக்கதி பதியை யுரைத்தவெ
னியல்வளரச் செயுமெண்ணமதாற்
பெருவரை சுற்றிய வுலகினி ருட்குவை
பிரிவுபடுத்திய தண்மையினர்
பிரசமுகக் கடிகமல மலர்த்திய பெருமை
படைத்துள பன்னிருபேர்
பருதிக ளெட்டெனு மொருகணி தத்தறு
பரமவ சுக்கனல் வண்மையினர்
பதினொரு ருத்திர ரிருவர் மருத்துவர்
பதமித யத்தற வுன்னுதுமே. 10.

காப்புப் பருவம்

முற்றிற்று.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[3-வது வால்யூம் 989-வது பக்கத் தொடர்ச்சி]

2-ம் பத்து—7-ம் தசகம்

1-ம் பாசுரம்.

கேசவன் தமர்கீழ் மேலெ மரேழு பிறப்பும்
மாசதி ரிதுபெற்று நம்முடைய வாழ்வு வாய்க்கின்றவா
வீசனென்கருமாணிக்கமென் செங்கோலக்கண்ணனென்
நாயகனெம்பிரானெம்மா னாராயணனாலே. [விண்ணோர்

அவதாரிகை:—முன்வந்த "வைகுந்தா" என்ற திருவாய்மொழியின் ஏழாவது பாசுரத்தில் "மூவேழுலகு முண்டான் எனக்குள் புகுந்து அகல்வானில்லை செடியார்நோய்களெல்லாந் துரந்து எமர்கீழ்மே லெழு பிறப்பும் நரகத்தில் சேர்தல் மாறினரே" என்று பிரஸ்தாபத்துக்கு வந்ததையே இந்தத்தசகம் விவரிக்கிறது. இந்தத் தசகம் ஒன்றுமே பதின்மூன்று பாக்களாலமைக்கப்பெற்றது. பெருமானின் அஸாதாரணமான கேசவாதி பன்னிரண்டு திருநாமங்களைப்பற்றியபாடல் பன்னிரண்டும் பல சுருதிலொன்றும்ஆகப் பதின்மூன்று அடங்கியது.

பொழிப்புரை:—எல்லாருக்கும் ஈசுவரனும் நிரவதிக ஸௌந்தரியமுடையவனும் அயர்வற்ற நித்திய ஸூரிகளுக்கு அதிபதியாயும் அடியேனுக்கு அஸாதாரணமான சுவாமியாயும் பக்தவத்ஸல பராதீனமுதலிய சகல கல்யாணகுணங்களு முடையவனுமான நாராயணன் கிருபையாலே என்னோடு சம்பந்தமுள்ள பதினன்கு தலைமுறையாரும் அவனுக்குத் தாஸரானார்கள். இப்படி மஹத்தான பலம் பெறும்படியாக நம் சம்பத்து வாய்த்திருக்கின்றது. ஹாஹா! என்ன பாக்கியம்!

குறிப்புக்கள்:—எழும் மேல் சந்ததி ஏழும்—அதாவது என் முன் பதினன்கு சந்ததிகளாயினோரும் (1) கேசவன் தமர்-மஹா விஷ்ணுவுக்குத் தாஸர் ஆனார்கள்.மா சதிரிது = இது மா சதிர்என்று அந்வயப்படும். இந்தப் பெரிய விசேஷபலத்தை, பெற்று-அடைந்து, நம்முடைய வாழ்வு - நம்முடைய ஸம்பத்து, வாய்க்கின்ற-(வினைமுற்று) வாய்த்திருக்கின்றது. ஆ - இது என்ன ஆச்சரியம்! அடியேனுக்குப் பகவானின் கலவை ஏற்பட இதை யான் உபாயநிமித்தமாகக் கருதாதிருக்க அவன் இதையொரு சாதுரியமுள்ள மார்க்கமாய் யான் அனுஷ்டித்ததாக வமைத்துக்கொண்டு அதற்குப் பலனாக என் முன்னோர்கள் 14 தலைமுறைகளுள்ளாரையும் தன் தமராக ஆக்கிக்கொண்டான். இவ்வளவு வாழ்வு யாருக்கு அமையும்.

2-ம் பாசுரம்.

நாரணன் முழுவே ழுலகுக்கும் நாதன் வேதமயன்
காரணம் கிரிசை கருமமிவை முதல்வ னெந்தை
சீரணங் கமரர்பிறர் பலரும் தொழுதேத்த நின்று
வாரணத்தை மருப்பொ சித்தபிரா னென்மா தவனே.

விசேஷ பதக் குறிப்புகள்:—காரணம் - கிரியாஸாதநம். கிரிசை - "கிரியை" என்கிற ஆரிய பதத்தின் திரிபு - கருமம். மேல்கண்ட காரணத்தாலும் செய்கையாலுமுண்டான காரியம் இங்கே மஹத் அகங்காராதி பூத சூக்ஷ்மங்கள். இவை முதல்வன - இந்த மூன்றிற்கும் மூல பூதன். சீரணங்கு, (அணங்கு-தெய்வப்பெண், சீரணங்கு-மஹாலெட்சுமி) எந்தை-என்பிறப்புக்குக் காரணமானவன். நாராயணன்-எல்லா நாரங்கள்-அதாவது எல்லாச் சித்அசித் வஸ்துக்களுக்கும், அயநம்-ஆசிரயமானவன்.

அவதாரிகை:—ஈசன் என்று முன்பாசுரத்தில்பிரஸ்தாபித்த ஈசுவரத்தை இப்பாட்டு விவரிக்கிறது.

பொழிப்புரை:—ஸர்வாந்தராத்மாதனுய் ஸர்வலோகேசுவரனுய் ஸர்வவேதங்களால் அறியப்படுகிறவனுய் ஸர்வத்துக்கும் காரணவஸ்துவாயிருந்து அவைகளை வேறுபடுத்தி ஸூக்ஷ்மபூதனுயிருந்து அவைகளால் ஸகல லோகங்களையும் வியாபிக்கச்செய்து நிர்வஹிக்கின்ற ஈசனும் மஹாலக்ஷ்மியாலும் அமரர்களாலும் தொழுதுஏத்தப்பட்டவனும் குவலயாபீடத்தின் தந்தங்களை முறித்தவனும் மாதவனாலே எமர் ஏழுபிறப்பும் கேசவன் தமர் ஆயினர்.

3-ம் பாசுரம்

மாதவனென் றதேகொண் டென்னையினி
இப்பாற் பட்டது
யாதவங்க ளுஞ்சேர் கொடேனென்
றென்னுட் புகுந்திருந்து
தீதவங்கெ டுக்குமமு தஞ்செந்தா
மரைகட் குன்றம்
கோதவமி லென்கன்னற் கட்டியெம்
மானென் கோவிந்தனே.

அவதாரிகை:—இந்தப் பாட்டுப் பகவானுடைய அஸாதாரணமான பன்னிரண்டு திருநாமங்களில்மூன்றுவதான "மாதவன்" என்ற திருநாமத்தின் மஹிமையைக் குறிப்பிக்கிறது. "மாதவன்" என்ற திருநாமத்துக்கு "இலக்குமியின் மணவாளன்" என்றர்த்தம். பக

வான்தன் தமர்ஏழுபிறப்பினரையும் கேசவன் தமராக ஆக்கினதற்குக் காரணம் ஆழ்வார்தாம். மஹாஇலக்குமியின் பரிஜநங்கள் பகவானைக் குறிக்கொள்ளுகையில் அவள்தன் மணவாளன் என்று சொல்வதுபோல், தாமும் அப்பெயரிட்டு அழைத்ததையே காரணமாகக் கொண்டு தன்பக்கல் கிருபைசெய்து தம் ஏழு பிறப்பினர்களையும் தனக்கு உறவினராகக் கொண்டான் என்கிறார்.

பதவுரை:—மாதவனென்றதே-பதத்தின் பொருளை நினையாமல் வாய்ச்சொல்லாய் மாதவனென்றதையே, கொண்டு-. காரணமாகக்கொண்டு இனி - இக்காலத்திற்குமேல். இப்பாற்பட்டது - வாசிகமாய், செய்த இந்தத் தபஸுக்குமேல், என்னை-ஒருவிதமான,அவங்களும்-கெடுதிகளும் அதாவது ஈசனைவிட்டுப் பிரிவேனென்ற பயமும் அவனையணுக உரித்தே னல்லேன் என்ற தாழ்ச்சியான நினைவும்; சேர்கொடேன் - சேரவொட்டேன், என்று - தீர்மானித்து-"புகுந்து" என்கிற பதத்தோடு அன்வயம். செந்தாமரைக் கண்குன்றம் - இலக்குமியின் பரிசரியரைப் பார்ப்பதுபோல் அப்போழ்து விகஸித்த தாமரைப்பூப்போலான பார்வையால் குன்றம்போல் விளங்கும் மூர்த்தி, என்னுள் புகுந்து இருந்து - நினைத்துபெற்று - வெகு ஜன்மங்களாய்த் தொடரும் தோஷத்தையும், அவம் - நடுவில் ஸம்பவித்துள்ள கேடுகளையும், கெடுக்கும் - போக்கடிக்கும், அமுதம் - எனக்கு அமிர்தமானவன், எம்மான் கோவிந்தன் - எனக்கு ஸ்வாமியானவன் எல்லாப் பிராணிகளையும் காத்தளிக்கும் ஈசன். கோது - தேஹங்களைச் சார்கிற சுபாவ தோஷத்தையும், அவம்-முன் செய்த பாபங்களால் பரிபக்குவமாகிப் பலன்கொடுக்கும் தோஷங்களையும், இல் - இல்லையாக்கினான் நசிப்பித்தான், கன்னற்கட்டி - சர்க்கரைக்கட்டி போன்று வெகு ரஸவஸ்துவானவன்.

விசேஷக் குறிப்பு:—"இனி" "இப்பாற்பட்டது" என்ற ஒரே அர்த்தமுள்ள பதங்கள் இரட்டித்ததின் பிரயோஜநம்—பகவான் "இனி" என்றுசொன்னதின் பின் "ஐயோ! இப்படிப் பக்தியுள்ள ஆழ்வாரை நாம் இத்துணைகாலம் விட்டகன்றிருந்தோமே! என்ன நம்மிழிவு" என்று மனம் தயங்கி யாது செய்யக்கடவதென்று பெருமூச்சுவிட்டு, இறந்தகாலத்தில் நிகழப்பெற்றதை நம்மால்கூட திருத்தவல்லதில்லையே என்று பரிதபித்துச் சில காலவிளம்பத்தின்பிறகு "இனிமேலாகிலும்" என்ற பொருளுள்ள "இப்பாற்பட்டது" என்ற பதத்தை இரட்டித்துக் கூறினாரென்பது ஆறுயிரப்படி வியாக்கியானத்தின் நிர்வாகம்.

4-ம் பாசுரம்.

கோவிந்தன் குடக்கூத்தன் கோவல
னென்றே குனித்துத்
தேவுந்தன்னையும் பாடியாடத் திருத்தி
யென்னைக் கொண்டேன்
பாவந் தன்னையும் பாறக்கைத் தமரே
ழேழு பிறப்பு
மேவுந்தன்மை யுமாக்கினான் வல்ல
னெம்பிரான் விட்டுவே.

பதக்குறிப்புக்கள்:—குடக்கூத்து, பால்பெய்யும் குடத்தைத் தலையில் வைத்தாடும் ஓர்வகைக் கூத்து. இஃது கிருஷ்ணபகவான் வாணாசுரனைக் கொன்றபோது உற்சாகத்தால் அவன் நகரத்தில் முதலில் ஆடியகூத்து. கோவலன் - கோபாலன் என்ற பதத்தின் திரிபு, குனித்து - ஆடி, பாற - ஓடும்படி, கைத்து - துரத்தி. மேவும் தன்மை - இடைவிடாது தொடரும் குணமுள்ளவர்களாகுந் தன்மை. விட்டு - "விஷ்ணு" என்ற வடமொழித் திரிபு. வல்லன் - சாமர்த்தியமுள்ளவன். "விஷ்ணு" - எல்லாவற்றிலும் அனுப்பிரவேசிப்போன்.

பொழிப்புரை.—இப்படி என்னுள்ளேபுகுந்திருந்து தன்னுடைய குணசேஷ்டிதங்களைத் துதித்து ஆடும்படியாகவும் மேல்பாட்டுகளில் செப்பியபடி அவனது சர்வேச்வரத்தையும் "கோவிந்தன்" என்ற திருநாமத்துக்கு ஏற்றபடி அவனது ஆசிரதபராதீனத்தையும் பாடும்படியாகவும் என் பாவங்களைப் பற்றறத் தீர்த்து என்னைத் திருத்திபதுமல்லாமல், என்னோடு ஸம்பந்தித்தார்; பதினான்கு தலைமுறையாரும் தன் குணங்களில் ஈடுபட ஆக்கினான்; என் பிரபு வல்லன், என் ஆயனான கோபாலன் வல்லன், என் பிரபுமகாவிஷ்ணு வல்லனே, வெகு சார்த்தியமுள்ளவன்.

5-ம் பாசுரம்

விட்டிலங்கு செஞ்சோதித் தாமரைப்
பாதங்கைகள் கண்கள்
விட்டிலங்கு கருஞ்சுடர்
மலையே திருவுடம்பு
விட்டிலங்கு மதியம்சீர்
சங்கு சக்கிரம் பரிதி
விட்டிலங்கு முடியம்மான்
மதுசூதனன் றனக்கே.

பதக்குறிப்புக்கள்:—விட்டு - தடைபடாமல் வியாபித்து, இலங்கு - பிரகாசிக்கிற, மதியம் - சந்திரன், பரிதி - ஸூரியன், மதுசூதனன் - மதுவென்ற அரக்கனைக்கொன்றவர். பகவான் திருப்பாதங்கள் திருக்கைகள் திருக்கண்கள் செந்தாமரைகள். திருவுடம்பு நீலமலை ஒத்தது. அவனேந்திய சங்கோ சந்திரனை ஒத்தது. - அவன் சக்கராயுதமோ ஸூரியனைப்போன்றது. அவன் திருவபிஷேகமோ மாட்சிமை பொருந்திய சிவந்த ஜோதிஸு.

விசேஷக் குறிப்பு:—இப்பாசுரத்தின்கருத்து பகவானைப் புகழ்வதற்கன்று. இவ்வண்ணம் ஆழ்வாருக்குக் கரைகாணா இன்பத்தை ஊட்டி அவரை வசீகரித்து முன்பாசுரத்தில் சொன்னபடி ஆடவும் பாடவும் ஈடுபாட்டை விளைவித்தானென்று நமக்கு உணர்த்தும் பொருட்டு.

ஏமாங்கத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் BA. BL.
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம். வேளாளர் வீதி. புரைசைவாக்கம் சென்னை. விலை ரூ. 1—4—0

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[253-வது பக்கத் தொடர்ச்சி]

3. உவமானப் பிரமாணம்

உவமையாவது யாதென்பது பின்வரும் சூத்திரத்தால் விளங்கும்:—

"பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை"

தண்டியலங்காரம் - பொருளணியியல் 30.

பண்பாலும்தொழிலாலும்,பிரயோசனத்தாலும்ஒன்று அல்லது பல பொருட்களோடு ஒரு பொருளை இயைய வைத்து ஒப்புமை புலப்படப் பாடுவது உவமையென் னும் அலங்காரமென நமதிலக்கணங்கள் கூறும்.

பண்புவமை வருமாறு (உ-ம்)

பவளத்தடவரை போலுந் திண்டோள்க
ளத்தோள் மிசையே
பவளக்குழை தழைத்தா லொக்கும்
பல்சடை யச்சடைமேல்
பவளக் கொழுந்தன்ன பைம்முக நாகமந்
நாகத் தோடும்
பவளக்கண் வால மதியெந்தை
சூடும் பனிமலரே.

தனித் திருவிருத்தம் - 1.

தொழிலுவமை (உ-ம்)

முல்லை நன்முறு வல்லுமை பங்கனார்
தில்லை யம்பலத் தில்லுறை செல்வனார்
கொல்லை யேற்றினர் கோடிகா வாயென்றங்
கொல்லை யேத்துவார்க் கூனமொன் றில்லையே.

திருக்கோடிக்கா-திருக்குறுந்தொகை 3.

பயனுவமை * (உ-ம்)

பொருளி னோடுநற் சுற்றமும் பற்றிலர்க்
கருளு நன்மைய தாபவ ரும்பொருள்
சுருள்கொள் செஞ்சடை யான்கச்சி யேகம்பம்
இருள்கெடச் சென்று கைதொழு தேத்துமே.

திருவேகம்பகம் - திருக்குறுந்தொகை 6.

[குறிப்பு:—இருள் என்பது இருள்போன்ற அஞ் ஞான மாதலால் இது தொகையுவமையுமாம்]

ஒரு பொருளோடு ஒரு பொருள் உவமை (உ-ம)

பொன்னை வகுத்தன்ன மேனியனே புணர்மென் முலையாள்
தன்னை வகுத்தன்ன பாகத்தனே தமியேற் கிரங்காய்!
புன்னை மலர்த்தலை வண்டுறங்கும் புகலூ ரரசே!
யென்னை வகுத்திலையே லிடும்பைக கிடம்யாது சொல்லே

திருப்புகலூர் - திருவிருத்தம் 2-3.

ஒரு பொருளோடு பலபொரு ளுவமை (உ-ம்)

தேனைக்குந் கிளிமழலை யுமைகேள்வன் செழும் பவளத்
தானைக்குந் திருமேனித் தழலுருவாஞ் சங்கரனை
வானைக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கு
மேனோர்க்கும்பெருமானை யென்மனத்தேவைத்தேனே

திருவேகம்பம் - பண் - காந்தாரம் 2.

* மைக்கொள் கண்ணுமை பங்கினன் மான்மழு
தொக்க கையினன் செய்யதோர் சோதியன்
தொக்க மாபொழில் சூழ்தரு கோளிலி
நக்க னைத்தொழ நம்வினை நாசமே.

திருக்கோளிலி-திருக்குறுந்தொகை 1.

பல பொருளோடு ஒருபொரு ளுவமை (உ-ம்)

முத்தி னைமுத லாகிய மூர்த்தியை
வித்தி னைவிளை வாய விகிர்தனைக்
கொத்த லர்பொழில் சூழ்தரு கோளிலி
யத்த னைத்தொழ நீங்குநம் மல்லலே.

திருக்கோளிலி - திருக்குறுந்தொகை 2.

பல பொருளோடு பலபொரு ளுவமை (உ-ம்)

திண்குணத்தார் தேவர் கணங்க ளேத்தித்
திசைவணங்கச் சேவடியை வைத்தார் போலும்
விண்குணத்தார் வேள்வி சிதைய நூறி
வியன்கொண்டன் மேற்செல் விகிர்தர் போலும்
பண்குணத்தார் பாடேலோ டாட லோவாப்
பரங்குன்ற மேவிய பரமர் போலும்
எண்குணத்தா ரெண்ணும்பிரவர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே.

திருவிடைமருதூர் - திருத்தாண்டகம் 4.

இவ்வாறு, பண்பு தொழில் பயன் என்னும் ஏதுக் களால் காட்டும் உவமை,ஒன்றோடொன்றுக்கும், ஒன் றோடு பலவற்றிற்கும் பலவற்றோடு ஒன்றுக்கும் ஒப் புமைப்படுத்துமென்பது கண்டோம். மற்றும் உவமை யாவது தொகையுவமை யென்றும் விரியுவமையென் றும் இருவகைப்படும்.

விரியுவமை

பொன்னைப் பானை பொன்னிற்சுடர் போல்வதோர்
மின்னைப் பானை விண்ணோரு மறிகிலா
ரன்னைப் பானை யரத்துறை மேவிய
தன்னைப் பானைக் கண்டீர்நாந் தொழுவதே.

திருஅரத்துறை - திருக்குறுந்தொகை 8.

தொகை யுவமை (உ-ம்)

செம்மலர்க் கமலத்தோனுந் திருமுடி காணமாட்டான்
அம்மலர்ப் பாதங்காண்பா னாழியா னகழ்ந்துங்காணன்
நின்மல னென்றங் கேத்த நினைப்பினை யருளிநாளும்
நம்மல மறுப்பர் போலு நனிபள்ளி யடிகளாரே.

திருநனிபள்ளி - திருநேரிசை 6.

மற்றும், பொருளொருக்கா லுவமையாயும், உவமை யொருக்காற் பொருளாயும் ஒரு தொடர்ச்சிக்கண்ணே வருவதாகிய "இதரவிதர" வுவமை யென்பதும் ஒன் றுண்டு:—

விழுமணி யயிலெயிற் றம்பு வெய்யதோர்
கொழுமணி நெடுவரை கொளுவிக் கோட்டினார்
செழுமணி மிடற்றினர் செய்யர் வெய்யதோர்
கெழுமணி யரவினர் கெடில வாணரே.

திருக்கெடிலவாணர் - பண் - காந்தாரம் 4.

மற்றும் பலவகை வுவமைகள் உள. அவற்றுள் சில கூறுதும்:—

சமுச்சய வுவமை (உ-ம்)

கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர் சடைமிசைப் பிறையு மேங்கவே
கிடந்துதா னகுதலைக் கெடில வாணரே.

திருக்கெடிலவாணர் - பண் - காந்தாரம் 3.

மறுபொருளுவமை (உ-ம்)

நிதியொப் பானை நிதியிற் கிழவனை
விதியொப் பானை விண்ணோரு மறிகிலா
ரதியொப் பானை யரத்துறை மேவிய
கதியொப் பானைக் கண்டீர்நாந் தொழுவதே.

திருஅரத்துறை - திருக்குறுந்தொகை 5.

மற்றும் தண்டியாசிரியர், உண்மையுவமை, புகழுவமை, நிந்தை உவமை, நியமவுவமை, அநியவுவமை ஐயவுவமை, இன்சொலுவமை, தெரிதரு தேற்றவுவமை,விபரீதவுவமை, இயம்புதல் வேட்கையுவமை, பலபொருளுவமை, விகாரவுவமை, அபூதவுவமை, பலவயிற்போலி யுவமை, ஒருவயிற் போலியுவமை கூடாவுவமை, பொது நீங்குவமை, மாலை யுவமை என்பன கூறினர். அவற்றின் தொகைச் சூத்திரம்:—

விரியே தொகையே யிதர விதர
முறைபெறு சமுச்சய முண்மை மறுபொருள்
புகழ்த னிந்தை நியம மநியம
மையந் தெரிதரு தேற்ற மின்சொல்
எய்திய விபரீத மியம்புதல் வேட்கை
பலபொருள் விகார மோக மபூதம்
பலவயிற் போலி யொருவயிற் போலி
கூடா வுவமை பொதுநீங் குவமை
மாலை யென்னும் பால தாகும்.

பொருளணியியல் 31.

இவற்றை வேறு வகையில்

"அற்புதம் சிலேடை யதிசயம் விரோதம்
ஒப்புமைக் கூட்டம் தற்குறிப் பேற்றம்
விலக்கே யேதுவென வேண்டவும் படுமே"

என்றுர். இவ்வாறு விரித்த உவமைகளில் உவமேய அடைக்கு உவமான அடை "மிகுதலும், குறைதலும், தாழ்தலும், உயர்தலும், பால்மாறு படுதலும்,பாகுபாடுடைய" வென்று கூறுவார். அவற்றை உணர்த்தும் உவமைச் சொற்கள்

"போல, மான, புரைய, பொருவ
நேர, கடுப்ப, நிகர, நிகர்ப்ப
வேர, வேய, மலைய, வியைய,
வொப்ப வெள்ள வுறழ வேற்ப
வன்ன, வனைய, வமர வாங்க
வென்ன விகல விழைய வெதிரத்
துணைதூக் காண்டாங்கு மிகுதகை வீழ
இணைசிவன் கேழற்றுச் செத்தொடு பிறவும்
நவைதீர் பான்மை யுவமைச் சொல்லே"

பொருளணியியல். 34.

என்பது காண்க. அவ் வுவமைகளினின்று உருவகம் பிறக்கும்.

"உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றன மாட்டினஃ துருவக மாகும்" என்பார்.

இவ்வாறு உவமைகள் அணியியலில் வகுக்கப்பட்டன வற்றை அடிப்படையாய்க்கொண்டு தர்க்கத்தில் உவமானப் பிரமாணத்தை நிரூபிப்பார்.

உவமானப்பிரமாணமாவது உவமானத்தை அடிப்படையாய்க்கொண்டதொரு பிரமாணமாகும். அதிதேச வாக்கியப்பொருள் நினைவொடுகூடிய ஆவின் ஒப்புமை விசிட்ட பிண்ட ஞானம் உவமானம். காட்டுப் பசுவை ஒருவன் காணநேர்ந்திரானேனும், வனத்திற் சென்ற ஒருவனிடம் இவ்வனத்தில் காட்டுப்பசுக்கள் இருக்கின்றன என்பது உணர்ந்தானுதலின், அந்நினைவு காட்டிற் செல்லுங்காலை, இடையன் வயமில்லாததோர் பசு சுயேச்சையாய்த் திரிவது கண்டவுடனே இது பசுவைப் போலிருப்பினும், இடையன் வசமிராது மனிதரைக் காணும்போதே வெருண்டோடுவதால், பசுபோன்று அத்தன்மையாவும் உடைய இது காட்டுப் பசுவே யென்று துணிகின்றான். இதுவே உவமானப்பிரமாணத்தாலறியு முறை. இப்பிரமாணம் பிரத்தியட்சப் பிரமாண சம்பந்தமாய் அந்நினைவால் விசிட்டபிண்ட ஞானம் பெற்று உவமிதி யிது வென நிச்சயிக்கும் உவமிதி ஒப்புமை ஞானத்தாலுண்டாவதுபோன்று விதர்ம்ம ஞானத்தாலுண்டாகும். உவமானத்தில் அடங்காப்பொருளை உவமான முறையில் அப்பர் விளக்குவது காண்க:—

பிறவாதே தோன்றிய பெம்மான் றன்னைப்
பேணுதா ரவர்தம்மைப் பேணு தானைத்
துறவாதே கட்டறுத்த சோதி யானைத்
தூநெறிக்குத் தூநெறியாய் நின்றான் றன்னைத்
திறமாய வெத்திசைக்குந் தானே யாகித்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிறமா மொளியானை நீடூரானை
நிதனே னென்னே நான் நினையா வாறே.

திருப்புன்கூருந் திருநீடூருந் திருத்தாண்டகம் 1.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[251-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 1.

இடம்:—உரோமாபுரி. செனட்மண்டபம். செனட் சபையினர் வீற்றிருக்கின்றனர்.

செனட் சபைக்குச்செல்லும் வீதியில் சனக்கூட்டம். அதற்கிடையே, ஆர்ட்டிமிடோரஸும் நிமித்தகனும் இருக்கின்றனர். வாத்தியம் முழங்குகின்றது. ஸீஸர், ப்ரூட்டஸ், காஸ்ஸியஸ், காஸ்க்கா, டெஸியஸ், மெட்டல்லஸ், ட்ரெபோனியஸ், ஸின்னு, ஆண்டனி, லெபிடியஸ், பாபிலியஸ் லீனு, பப்லியஸ், மற்றவர்களும் வருகின்றனர்.

ஸீஸர்:—மார்ச்சு மத்தி வந்துவிட்டது. (1)

குறிப்பு:—பாபிலியஸ் லீனு என்பவனும், பப்லியஸ் என்பவனும் செனட்சபை அங்கத்தினர். ஸிஸிரோவும் ஒரு செனட் சபை அங்கத்தினன்; ஆனால் அவன் இப்பொழுது இங்கில்லை. லெபிடியஸ், என்பவன் உரோமப் பெருமக்களில் ஒருவன். பிறகு இவன் ப்ரூட்டஸ் முதலானவர்களுக்கு விரோதமாய் ஆண்டனியுடன் சேர்ந்து கொள்வான்.

(1) முன் (அங்கம் 1. களம் 2). "மார்ச்சு மத்தியைக் கருத்தில் வைத்துக்கொள்" என்று தனக்கு எச்சரிக்கை செய்த நிமித்தகனை இப்பொழுது ஸீஸர் கும்பலிற் கிடையே பார்த்து, "ஏ, இதோ மார்ச்சுமத்தி வந்துவிட்டது. ஒன்றும் நேரவில்லையே. உன் ஜோஸியம் எல்லாம் என்ன வாயிற்று ?" என்று பரிகசிக்கின்றான்.

நிமித்தகன்:—ஆம், ஸீஸர்; எனினும் போய்விடவில்லை. (2)

ஆர்ட்டிமிடோரஸ் :—ஸீஸரே, வாழ்க! இப்பத்திரத்தைப்படி. (3)

டெஸியஸ் :—ஓய்வுநனி யுனக்கு வாய்த்தநேரத்தில், பணிவுடைய தன் விண்ணப்பமிதனை நீ படித்துப் பார்க்குமாறு ட்ரெபோனியஸ் விழைகின்றான் (4).

ஆர்ட்டிமிடோரஸ்:—ஓ ஸீஸர், எனதை முதலிற் படி. ஏனெனில், ஸீஸரை அணிமிப்பற்றிய விண்ணப்பம் எனது: பெரியோய் ஸீஸரே, இதனைப்படி. (5)

ஸீஸர்:—எம்மையே பற்றியது கடையிலே கருதப்படும். (6)

ஆர்ட்டிமிடோரஸ்:—ஸீஸரே, தாழற்க, இப்பொழுதேபடி இதனை.

ஸிஸர்:—என்ன! பித்தனோ இந்தப் பயல் (7).

பப்லியஸ்:—அடே! இடம் விடு. (8)

ஸீஸர்:—என்னிது! வீதியிலா உங்கள் விண்ணப்பங்களை வற்புறுத்துகின்றீர்? சபைமண்டபத்திற்கு வாருங்கள்.

[மற்றவர் பின்தொடர, ஸீஸர் சபைமண்டபத்திற்குள் செல்கின்றான். சபையினர் எல்லோரும் எழுந்து நிற்கின்றனர்]

பாபிலியஸ்:—நீங்கள் முயலுங்கருமம் இன்று தழைக்கவேண்டுமென்று கோருகின்றேன்.

காஸ்ஸியஸ்:—எக்கருமம், பாபிலியஸ் ?

பாபிலியஸ்:—நன்று, விடை தருக (9)

[ஸீஸருக்கருகு செல்கின்றான்]

ப்ரூட்டஸ்:—பாபிலியஸ்லீனா யாது சொல்லினன் ? (10)

காஸ்ஸியஸ்:—இன்று நம் கருமந் தழைக்கவேண்டுமென்று கோரினன். நம்முடைய நோக்கம் வெளியாய்விட்டதென அஞ்சுகின்றேன்.

ப்ரூட்டஸ்:—பார்,எப்படி அவன் ஸீஸரின்பால் மண்டுகின்றான் ! உற்றுநோக் கவனை.

காஸ்க்கா:—காஸ்க்கா, சடிதியிற் செய்திடு. ஏனெனில், இடையூறு நேருமென்றஞ்சுகின்றோம். ப்ரூட்டஸ், என் செய ? இது வெளிப்பட்டால், காஸ்ஸியஸ் அல்லது ஸீஸர் ஒருபோதும் திரும்பமாட்டான்—என்னையே கொன்றுகொள்வேன். (11)

ப்ரூட்டஸ்:-காஸ்ஸியஸ், கலங்கற்க; பாபிலியஸ்லீனா, நம்முடைய செய்திகளைப்பற்றிப் பேசுகின்றானலன். பார், புன்னகை புரிகின்றானவன்: ஸீஸரும் வேறுபாடடைகின்றிலன். (12)

காஸ்ஸியஸ்:-ட்ரெபோனியஸிற்குத் தன் வேலைதெரியும்—பார், ப்ரூட்டஸ், மார்க் ஆன்டனியை வழியினின்று விலகக்கொண் டேகுகின்றான். (13)

[ஆண்டனியும் ட்ரெபோனியஸும் போய்விடுகின்றனர். ஸீஸரும் செனட்சபை அங்கத்தினரும் தத்தம் ஆதனங்களில் அமர்கின்றனர்]

டெஸியஸ்:—மெட்டலஸ் ஸிம்பர் எங்குளன்? அவன் சென்று இப்பொழுதே தன் மனுவை ஸீஸருக்குச் செய்துகொள்ளட்டும்.

ப்ரூட்டஸ்:—கேட்கின்றான்: அருகடர்ந்து அவனைத் தொடர்ந்துபேசுங்கள்.

ஸின்னா:—முதலில் கையை ஓங்கவேண்டியவன் காஸ்க்கா, நீயே.

காஸ்க்கா:—நாமெல்லோரும் ஆயத்தமா யிருக்கின்றோமோ ?

(2) “இந்நாள் வந்ததேயொழிய இன்னும் கழியவில்லையே. கழிந்தபின்னன்றோ என் ஜோஸியம் பலித்தது, இல்லை, என்று இயம்பலாம். பின்னர்ப் பார்த்திரு; தெரியும்” என்னும் பொருளில் நிமித்தகன் எதிர்விளம்பியது இது.

(3) முன்களத்தில் நாம் கண்ட ஆர்ட்டிமிடோரஸ் இவன். ஸீஸருக்கு விரோதமாக நிகழும் சதியாலோசனைகளை வெளிப்படுத்தி எழுதியுள்ள இப்பத்திரத்தை நீட்டுகின்றான்.

(4) ஆர்ட்டிமிடோரஸ் நீட்டிய பத்திரத்தில் அடங்கியிருப்பதை டெஸியஸ் அறிந்திரானேனும், அதனால் தம் கொடிய சூழ்ச்சி வெளிப்படலாமென்று ஐயுற்று அஞ்சி, அதனை ஸீஸர் படிக்காவண்ணம் இடையூறு செய்யுந் தந்திரமாய், இவன், ட்ரெபோனியஸ் செய்துகொள்ளும் விண்ணப்பமென்று வேறோர் பத்திரத்தை விரைந்துநீட்டுகின்றான்.

(5) எப்படியேனும், தான் கொடுத்த காகிதத்தை முதலில் ஸீஸரைப் படிக்கவைக்கவேண்டுமென்று, ஆர்ட்டிமிடோரஸ் தன்னால் ஆனபாடு படுகின்றான். “என் விண்ணப்பம் என்னைப்பற்றியதன்று; உன்னைப்பற்றியதே—உன்னுடை நன்மைக்கே ; ஆதலின் முதலிற்படி” என்று மன்றாடுகின்றான்.

(6) மிகவும் பெருந்தன்மை வாய்ந்த பதில் இது. ‘எம்மையே’ என்பது பெருமிதத்தில் வந்த பன்மை. என்னைப்பற்றியதாயின் அதற்கொன்றும் அவசரம் இல்லையே. மற்றவர்கள் குறைகளை எல்லாம் தீர்த்து முடிந்தபிறகே நான் என்னைப்பற்றிக் கருத இசைவேன்—என்கின்றான்.

(7) விதிவலிதாதலின், முன் நிமித்தகனைப் பித்தனென்று புறக்கணித்ததுபோலவே ஸீஸர் இவனையும் நடத்துகின்றான்.

(8) ஸீஸர் ஆர்ட்டிமிடோரஸைப் புறக்கணித்தவுடன் பப்லியஸ் அவனை அகற்றிவிடுகின்றான். இல்லையெனில் ஒருகால் ஆர்ட்டிமிடோரஸ் வெளிப்படையாகச் சொல்லிவிட நேர்ந்திருப்பினும் இருக்கலாம். பப்லியஸ் சதியாலோசனைக் காரர்களில் ஒருவன் அல்லன்.எனினும், பாபிலியஸிற்குத் தெரிந்திருப்பதுபோல் இவனுக்கும் விடயம் தெரிந்திருந்து, ஸீஸரின் கொலை நடைபெறவே விழைந்தவனாய், ஆர்ட்டிமிடோரஸை விரைந்து விலக்கினனோ, அல்லது, ஒன்றுந் தெரியாமலே, ஸீஸர் அவனை அவமதித்தகற்றினனெனத் தானும் அவமதித் தகற்றினனோ ஐயமறத் தெரிந்து இயம்ப இயல்வதில்லை.

(9) நடைபெறவிருக்கும் விடயம் தனக்குத் தெரியுமென்பதைக் குறிப்புணர்த்திவிட்டு ஸீஸரினிடம் சென்று விடுகின்றான் பாபிலியஸ்.

(10) பாபிலியஸ் அகன்றதும், ப்ரூட்டஸ் வந்து காஸ்ஸியஸை வினவுவது இது.

(11) நாம் காரியத்தை முடிப்பதன்முன் நம் இரகசியம் வெளியாகிவிடுமானால் நான் உடனே தற்கொலைபுரிந்து கொண்டுவிடுவேன். வெளிப்படாவிடில் ஸீஸர் மாண்டவனாவான். ஆதலின் இம்மண்டபத்தைவிட்டு எங்களிருவரில் ஒருவரே மீண்டு செல்வார்—என்பது பொருள்.

(12) பாபிலியஸ் ஸீஸருக்கருகு மண்டியதைக் கண்டு ப்ரூட்டஸ் முதலில் அஞ்சினனாயினும், பிறகு இவன் சிரிப்பதையும் ஸீஸரின் முகக்குறி மாறாதிருப்பதையுங் கண்டு, பாபிலியஸ் தம் சதியை ஸீஸருக்கு வெளிப்படுத்தவில்லை என்பதுணர்ந்து அச்சம்நீங்கிக் காஸ்ஸியஸையுந் தேற்றினன்.

(13) ஸீஸரின் நண்பனாகிய மார்க் ஆண்டனியை, ஏதோபேச்சுக்கொடுத்து ட்ரெபோனியஸ் அழைத்துக் கொண்டுபோய்விடவேண்டுமென்பதும், ஸீஸரின் கட்டளைப்படி நாட்டைவிட்டு அகற்றப்பட்டிருக்கின்ற தன் தம்பியை மன்னித்து அவன் மீளுமாறு அருளவேண்டுமென்று மெட்டல்லஸ்ஸிம்பர் ஸீஸரிடம் சென்று இறைஞ்சவேண்டுமென்றும், அப்பொழுது அவன்சார்பு பேச வருபவர்போல் மற்றச் சதியாளர்களும் ஸீஸரைச் சூழ்ந்துகொள்ளவேண்டுமென்றும், அச்சயம் காஸ்க்கா, முதலில் ஸீஸரைக் குத்தவேண்டுமென்றும், பிறகு மற்றவர்களும் குத்துவதென்றும் சங்கேதம் செய்துகொண்டிருந்தபடி நடக்கத் தலைப்படுகின்றது.

ஸீஸர்:—ஸீஸரும் அவன் செனட் சபையினரும் நேர்செய்ய வேண்டும்படி இப்பொழுது தவருயிருப்பது எது? (14)

மெட்டல்லஸ் ஸிம்பர்:—இணையரியஉயர்வுடையோய், திறனுடையோய், வலியுடையோய், மகா ஸீஸரே, நின் ஆதனத்தின்முன் தாழ்வுடைய இதயமொன்றை மெட்டல்லஸ்ஸிம்பர் கிடத்துகின்றுன். (15)

[முழங்காற்படி யிடுகின்றுன்]

ஸீஸர்:—நின்னை நான் தடுக்கவேண்டும், ஸிம்பர். (16) இந்த ஒடுக்கங்களும் இந்தக்கீழாய வணக்கங்களும், மனிதப் பொதுஇனத்தவர் இரத்தத்தை உருக்கி, முன்விதியையும் முதற்கட்டளையையும் சிறுபிள்ளைச் சட்டமாக மாற்றலாம் (17). இழுதைகளை இளக்குகின்றவைகளால், தனது உண்மைப்பண்பினின்று கரையப்பெறுமொரு அடங்கா வுதிரந் தாங்கியுளன் ஸீஸரென வெண்ணி வீணுசை வளர்க்குமோர் மதியிலி நீ ஆகாதே (18). இனிய சொற்கள், தாழ்ந்து கோணிய வணக்கங்கள், கயமைக் குக்கலின் கெஞ்சல்கள், என் மனத்திலிருப்பன இவை. நீ வளைந்தும் இறைஞ்சியும் அவன்பொருட்டுக் கெஞ்சுவாயாயின், உன்னை ஓர் நாயெனவே என் வழியினின்று, உதைத்தெறிவேன். பிழை யிழையான் ஸீஸர்; காரணமின்றித் திருப்தியடையவு மாட்டான், இதனை அறி. (19)

மெட்டல்லஸ் ஸிம்பர்:—என் னுடன்பிறந்தோன் தண்டனையைத் தவிர்க்குமாறு மாபெரும் ஸீஸரின் செவிதனில், எனதினும் இனியதாய் இசைக்கவல்ல தகவுடைய குரல்தான் ஒன்று இல்லையோ?

(14) வீதியிலே என்னைச்சூழ்ந்துகொண்டு நீங்கள் செய்த விண்ணப்பம் யாதென்று இப்பொழுது சொல்லுங்கள்—நான் தீர்க்கவேண்டிய குறை யாது? என்பது பொருள். நானும் என்னுடைய செனட்சபையும்"—என்று மன்னருக்குரிய மரபிலேயே ஸீஸர் இயற்கையாய்ப் பேசுவது கருதத்தக்கது.

(15) மெட்டல்லஸ் ஸிம்பரும் தன்னைப் படர்க்கையில் பேசிக்கொள்கின்றனன். முழங்காற்படியிட்டு, ஸீஸர் வீற்றிருந்த ஆதனத்தின்முன் தான் மார்புற விழுந்து வேண்டிக்கொள்ளப்போவதை "தாழ்வுடைய இதயமொன்றைக் கிடத்துகின்றுன்" என மிகவும் தாழ்மையுடன் பேசுகின்றுன் இவ்வஞ்சகன்.

(16) இப்படிக் முழங்காற்படியிட்டு என்னை நீ பணிய வேண்டா—அதற் கிடங்கொடேன்; என்பது பொருள்.

(17) மனிதப் பொதுஇனத்தவர் - சாதாரண ஜனங்கள்; தானே அவர்போலின்றி ஓர் தனிச்சிறப்பினன் என்கின்றுன் ஸீஸர். இரத்தம் என்பது இங்கு மனஉறுதியைக் குறிக்கின்றது. இரத்தத்தை உருககுதலாவது மனதை இளகச்செய்தல். முன்விதி, என்பது 'பண்டை வினை'என்பதுபோல்தோன்றுகின்றதேனும்,இங்குத்தான் முன்னே விதித்த ஆக்கினையையே ஸீஸர் குறிக்கின்றுன். முதற்கட்டளை - முதலில் தான் இட்ட கட்டளை. சிறுபிள்ளைச் சட்டம் - சிறு பிள்ளைகள் ஒன்றுகூடி விளையாடும்போது தமக்குள் ஏற்படுத்திக்கொள்ளும் நிபந்தனைகள். இதனை அவர் நிமிடத்திற்குநிமிடம் மனம்போனபடியெல்லாம் மாற்றிக்கொள்வார். நான் சாதாரணமனிதனொருவனு யிருந்தால், இப்படி நீ அடங்கி ஒடுங்கி வணங்குவதைக் கண்டு மனமிளகி, முன் நான் இட்ட கட்டளையைச் சிறுபிள்ளைச் செய்திபோல் எளிதில் மாற்றிவிட நேரலாம்.

(18) இழுதைகள் - முழுமூடர்கள். என் உறுதியைக் கரைத்து உன்பால் இரக்கம் கொள்ளும்படி செய்துவிட முடியும் என்று எண்ணுதே. குக்கலின் கெஞ்சல் - நாய்போற்கெஞ்சுதல். இழுதையர்களை இளக்குகின்றவைகள் என்றதை ஸீஸர், இனியசொற்கள் முதலிய மூன்றினுல் விரித்துரைக்கின்றுன்.

(19) என் கட்டளைகள் ஒருபோதும் பிழையுடையனவாய் இரா. அவை பிழையுடையனவென்று என்னை எண்ணச்செய்ய வேண்டுமாயின், தக்க காரணங்கள் காட்ட வேண்டும். அப்படிக்கின்றி வீணே கெஞ்சுவதால் பயனில்லை.

(20) என் தம்பிக்காகப் பரிந்துபேசி ஸீஸரை இணக்க வல்லவர் வேறொருவர் இல்லையோ?

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—5. சூர்ப்பணகைப் படலம்.

[255-வது பக்கத் தொடர்ச்சி]

அரக்கியோ வழிவது தவத்தின் பெருமையே

தன்கிளைக் கிறுதிகாட்டுவாள் நின்றவவ் வரக்கி, இராமனைக் காணலும், 'யாவனேவிவன், எந்தத்தேவனே' வென வையுற்று,

கற்றையஞ் சடையவன் கண்ணிற் காய்தலா
லிற்றவ னன்றுதொட் டின்று காறுந்தா
னற்றவ மியற்றியவ் வநங்க னல்லுருப்
பெற்றன னுமெனப் பெயர்த்து மெண்ணுவாள்

[கற்றையாகிய அழகிய சடையையுடைய சிவபிரான், தன் நெற்றிக் கண்ணுல் எரித்ததால் சாம்பராக உதிர்ந்து அங்கமில்லாதவனுகிய மன்மதன், அன்றுமுதல் இன்றுவரையில் நல்ல தவஞ்செய்து, மூன்னிலும் நல்ல உருவத்தைப்பெற்று இங்கு வந்துளன்போலும்—என்று எண்ணலாயினுள்]

சூரபன்மன் முதலாய அவுணர்களால்பேரிடருற்றுநைந்த அமரர்க ளுய்யுமாறு தன்னையுந் துறக்குந்தன்மை தங்கப்பெற்ற காமதேவன் அருந்தவமியற்றி முன்னினும் பன்மடங்கு பொலிவுமிக்க இந்நல்லுருவெய்தித் தன்னெதிர் தோன்றினுனேவென வையுற்று அதிசயங்கொண்ட இவ்வரக்கிசூர்ப்பணகையின் சிந்தனையையே, அமரருக்குக் காதற்றாதனுப்த் தன்பால் வந்தடைந்த நிடதர்கோமானை நோக்கிய தமயந்தியின் சிந்தனையும் ஒருவாறு ஒத்திருக்கின்றது. இவ் விதர்ப்பநகர் வேந்தன்பாவை,

மங்கையர் நிறையு நாணுங்
கவர்ந்திட வனப்பு வாய்ந்த
இங்கிவன் றன்னை ஞால
மின்புறப் படைத்தி லானேல்
திங்களங் கண்ணி வேய்ந்த
செஞ்சடைக் கடவு ளெங்ஙன்
பைங்கழை மதனைக் கொன்ற
படுபழி தீரு மாறே

[மாதர்தம் நிறையையும் நாணத்தையும் கவர்ந்துகொள்ளும்படி அழகுவாய்ந்த இவனை, உலகம் கண்டு இன்பமடையும்வண்ணம் படைத்திராவிடின், சந்திரனையும அழகிய கொன்றை மாலையையும் சூடியிருக்கின்ற சிவந்த சடையையுடைய சிவபிரான், பசுமையான கரும்புவில்லையுடைய மன்மதனைக் கொன்ற பழியை எவ்வாறுதீர்த்திருப்பான்] என்று தேறினுளென அதிவீரராம பாண்டியன் பரிவு மிகப் பாடுகின்றான். மன்மதனை இழப்பித்த இவ்வுலகத்திற்கு ஈடுசெய்யச் சிவபிரான் இவனைச் சிருட்டித்தான் என்று தமயந்தி சொல்வதற்கு எதிராக, இவ்வரக்கி இங்கு, மன்மதன் தன் பெருந்தவ முயற்சியால் நல்லுருப்பெற்று மீண்டனன் என்னுமிவ்வேற்றுமை இவ்விருவர்தம் பிறப்பிற்கும் பயிற்சிற்கும் ஏற்றபடி அமைந்திருக்கின்றது. கடவுளர்தம் கருணை நீதி முதலியகுணங்களைக்காட்டிலும்,தவத்தின் ஆற்றலிற்றானே இராவணன் தங்கை சூர்ப்பணகை அதிகமும் நம்பிக்கையுடையவளா யிருத்தல் இயற்கை. கடுந்தவங்கள் செய்து தன் முன்னோன் பெற்றுள ஆற்றல்களை நன்கு கண்டுள இவளுக்குத் தவப்பயனாய் மன்மதன் தன் னுருப்பெற்ற பான்மையே மனத்து முந்துறவந்து தோன்றுகின்றது. தவத்திலும், தெய்வத்திருவருளும் நீதியும் அதிகமாய் நினைக்கப்பயின்றுள மடந்தை தமயந்தியோ, சிவபிரானே, சிருட்டித்தானெனச் சிந்திப்பாளாயினாள்.

தவத்தின் மகிமையே இச்சூர்ப்பணகையின் மனத்து முன்னணி நின்றதென்பது, தவக்கோலங்கொண்டிருந்த இராமனை நோக்கி,

எவன்செய வினியவிவ் வழகை யெய்தினோ
னவன்செயத் திருவுடம் பலச நோற்கின்றா
னவன்செயத் தகையவிந் நளின நாட்டத்தான்
தவன்செயத் தவன்செய்த தவனெ னென்கின்றாள்

[இனிய இந்த அழகை எய்திய இவன், எதற்காக, இவ்வழகு வீண்போகும்படி தன் அழகிய உடம்புவாடத் தவஞ்செய்கின்றான்? பார்க்கப்பார்க்கப் புதுமை விளைக்கும் இந்தத் தாமரைபோன்ற கண்களையுடைய இவன் தவம்செய்யும்படி அந்தத் தவம்தான் செய்துள அருந்தவம் யாதோ— என்று எண்ணுகின்றாள்]

என்னும் பாசுரத்தால் விளங்குகின்றது. தவமேதவஞ் செய்யப் புகுமென நினைக்கும் நீர்மையளாவது தசமுகன் தங்கைக் கருமையன்று. வரம்பெறத் தவஞ் செய்வார் பிறர் பிறர்; மற்று அத்தவமே தவஞ்செய்து பெறற்தற்கி யாதேயுளது? இத்துணை அழகுடையவொருவன் தன்னைப் பூண்டொழுகுகின்றான் என்ற பெருமையல்லால் தவமே பெறவல்லபேறு வேறில்லை என்னுங் கொள்கையால் சூர்ப்பணகை இவ்வண்ணம் சொல்லலுற்றாள்.

TOPICS OF THE DAY
Order Your Copy

Gandhiji in England

And The Proceedings of The Second R.T.C.

Re. 1-8-0

The book begins from the Truce and contains a complete and comprehensive account of the Mahatmaji's voyage to England as the accredited Ambassador of India; his wonderful reception at various places, the addresses presented to him and his replies thereto; together with an account of the Proceedings of the 2nd R. T. C., verbatim reports of the speeches of the Mahatmaji, the Prime Minister Mr. Macdonald, Lord Sankey and other important pronouncements made by the other members of the Conference including the final statement of the Premier both at the R. T. C. and the House of Commons and the magnificent support of Lord Irwin in the Lords' Debate; his visit to the King and various other activities in England and the Continent bringing the story up to his return and landing at Bombay. A book of surpassing interest and useful addition to the history of the World.

Life of Barrister Savarkar

BY
CHITRA GUPTA

The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Re. 1-8**

Those, who like to know something of V. D. Savarkar's views, will do well to read his own books, for example:— Rs. A.

1. Hindutva 1 4
2. An Echo from the Andamans. ... 1 0
3. Hindu-Pad-Padashahi: or a critical Review of the Hindu Empire of Maharashtra. By Vinayak Damodar Savarkar with an introduction by Dr. R. C. Majumdar, M.A., Ph.D., Dacca 3 0

B. G. PAUL & Co.,
Publishers
12, Francis Joseph Street, MADRAS.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறாதீர்



யுனைடெட் ஸோல் ஏஜண்டு: கன்ஸர்ன், மதுரை.

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ:
பம்பாய்.
கல்கத்தா.

ம.டட. சயாவனபராசா ம.டட. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.டட. டூமெடிகேடட்-டப்பி

பிரான்சு:
மதுரை.
காஞ்சீபுரம்

கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது; உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனுக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B .A. B. L) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனுக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்டு செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, விலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

சர்வகலாசாலைப் பட்டம்:—சென்னைச் சர்வகலாசாலையினர் மகாமகோபாத்யாய ஸ்வாமிநாத ஐயர், ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார், திருவாங்கூர் சமஸ்தான பெரியராணி முதலிய 12 பேர்களுக்கு டாக்டர் பட்டம் அளித்துள்ளார்கள்.

***

சிறை சென்ற மாதர்:—இந்தியச் சட்டசபைக் கூட்டத்தில் கேட்கப்பெற்ற கேள்விக்கு விடையாக, ஜேம்ஸ் கிரீரார் என்ற நிர்வாகசபை அங்கத்தினர், 1932-ம் வருடம் பிப்பிரவரி மாதத்தில் சட்டமறுப்பு இயக்கம் காரணமாக 1500 பெண்கள் சிறைபுகுந்தனர் என்று கூறியுள்ளார்.

***

எளிமை யியக்கம்:—ஐரோப்பாவிலுள்ள வியன்னா என்னும் நகரத்தில், மக்கள் எல்லோரும் வாழ்க்கையில் எளிமையைக் கைக்கொள்ளவேண்டும் என்றும் ஆடம்பர உடைகளையும் மற்றச்செலவுகளையும் விட்டுவிடவேண்டுமென்றும் ஓரியக்கம் பரவிவருகின்றதாம்.

***

இரவீந்திரநாதர் பாரசீகப்பிரயாணம்:—பாரசீக நாட்டு அரசர் ஷா இரவீந்திரநாத டாகூரைத் தமது நாட்டிற்கு வந்துபோமாறு அழைத்துள்ளார். அவ்வழைப்புக் கிணங்கி அவர் ஏப்பிரல் மாதம் 11-ந்தேதி கல்கத்தாவிலிருந்து ஆகாயவிமானத்தில் பாரசீகம்செல்வார் என்றும், அங்கு 15 தினங்கள் தங்குவார் என்றும் தெரிகின்றது.

***

காலநிலை யறிவிக்கும் கருவி:—கல்கத்தாவிலுள்ள காலநிலை அறியும் இலக்கா உத்தியோகஸ்தரான டாக்டர் A. K. தாஸ் என்பவர் நெடுநாள் முயன்று காலநிலையை அறியும் ஒரு புதுக் கருவியைக் கண்டுபிடித்துள்ளார் என்றும், அதன் விலை ஒருஅணா வாகின்றதென்றும், அக் கருவிகொண்டு, மழை காற்று, புயல் முதலிய நிகழ்ச்சிகளை எளிதில் அறியலாமென்றும் சொல்கின்றனர்.

***

கோச்சியின் புதிய மன்னர்:—சமீபத்தில் கொச்சி சமஸ்தான மன்னர் சென்னையில் காலஞ்சென்றார். அன்னவர் தமக்கையின் புதல்வர் ஸ்ரீ இராமவர்மா என்பவர் அரசபதவியை ஏற்றுள்ளார். அவர் 1861-ம்ஆண்டு டிசம்பர் தாதம் 30-ந்தேதி பிறந்தவர். அவர் சிறந்த அறிவாளி. அவர் அநேக நூல்கள் இயற்றியுள்ளார். அத்தகையாரது ஆட்சிமுறை குடிகளுக்கு நலம்மிகப் பயக்கவல்லது. அவர், மலையாளம் சமஸ்கிருதம் ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளில் நல்ல தேர்ச்சியுடையவர்.

***

ஹடயோக விளையாட்டு:—வடஇந்தியா வாசியான ஹடயோகி ஒருவர் விஷம் கண்ணாடி அக்னித்திராவகம் கந்தகம் முதலியவற்றை உண்டு தீங்கொன்றும் எய்தாது இருந்தாராம். அவர் தமது சக்திகளை எல்லோருக்கும் காட்டிவந்தார். இவ்வடயோகி, தமது யோகபலத்தினால் பெற்ற ஆற்றலை விளையாட்டாக மாற்றி ஊர்ஊராகச் சென்று எல்லோரையும் வியக்கும்படிசெய்தார். ஸர் ஸி. வி. இராமன் முதலிய பல பிரமுகர்களும் கல்கத்தாவில் இவரது அற்புதச்செயல்களைக்கண்டு வியந்தனராம். இந்த யோகி சமீபத்தில் இரங்கோன் சென்று தமது ஆற்றலைக் காட்டினார். வேடிக்கை முடிந்ததும் அவர் நோய்எய்தினார். உடனே அவர் வயித்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட அங்கு இறந்துபோனார்—என்று இரங்கோன் செய்தி கூறுகின்றது.

ஆண்டுக் கூட்டம்:—மைலாப்பூரிலுள்ள பென்னாத்தூர் சுப்பிரமணி ஐயர் ஹைஸ்கூலின் வருஷக்கூட்டம் ஏப்பிரல் மாதம் முதல்தேதியன்று ரஸிக ரஞ்சனி சபைக் கட்டடத்தில் சென்னை ஐக்கோர்ட் தலைமை நீதிபதி ஸர். ஓவன் பீஸ்லி அவர்களின் தலைமையில் கூடிற்று. தலைவர் முன்னுரையாகச் சில வார்த்தை கூறிய பின் அக் கல்விச்சாலையின் தலைமை உபாத்தியாயர் இப்பள்ளிக்கூடத்தின் சரிதையை எடுத்துக் கூறினர். பின்னர் ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்காரால் எழுதப்பெற்ற ஹாஸ்யச்சுவை பொருந்திய நாடகத்தைப் பள்ளிமாணவர் நடித்துக்காட்டினார்கள். இறுதியில் அக்கிராசனர், மாணவர் உடற் பயிற்சியில் அதிகம் ஈடுபட வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறினார். ஸ்ரீமான் டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

***

கல்வி முயற்சி:—ஏப்பிரல் மாதம் முதல்தேதி ஸ்ரீமான் டி. எஸ். இராமஸ்வாமி ஐயரின் தலைமையில் கார்ப்பொரேஷன் கூட்டம் நடைபெற்றது. கல்வி விஷயக் கமிட்டியின் தலைவர் ஸ்ரீமான் வேங்கடஸாமி நாயுடு மேற்படி கமிட்டியின் கல்வித்திட்டத்தைச் சபையின் முன் தெரிவித்தார். அதில் கல்விக்காக வருமானம் 857390 ரூபாய் என்றும், 1932—1933 வருஷத்தில் 848160 கல்விக்காகச் செலவழிக்கப்படலாம் என்றும், பள்ளிக் கூடங்கள் சிலவற்றில் ரேடியோ வைப்பதற்கு ரூ. 600 ஒதுக்கப்பட்டுளதென்றும் குறிக்கப்பட்டிருந்தன. நிறைவேறிய இத்திட்டத்தை அரசாங்கத்தாருக்கு அனுப்பத் தீர்மானித்தனர்.

***

திருப்பதி மகிமை:—லோகோபகாரிப் பத்திரிகையில் ஸ்ரீமான் வி. சஞ்சீவிராவ் எழுதுகிறார்:—பாலக்காட்டிற் கருகாமையிலுள்ள ஒருசிறு கிராமத்தில் ஒரு சமஸ்கிருதப் பாடசாலையுளது. அவ்வூர்ப் பாடசாலையை ஏற்படுத்தி நடத்திவரும் ஸ்ரீமான் சுப்பிரமணி ஐயர் அவ்வூரில் ஒரு செல்வர். சென்றவாரம் அவர் தம் மனைவிமக்களுடன் திருப்பதிசென்று மலையேறி, பிரார்த்தனை செலுத்திவிட்டு மலையிறங்குகையில் அவர்கள் ஏறிவந்த டோலி முறிந்தது. பாத்திரங்கள் உடைந்துபோயின. ஸ்ரீமான்ஐயர்அவ்வூர் மாஜிஸ்டிரேட்டான, ஸ்ரீமான் R. V. பட்டர் வீட்டிற்குப் போக நினைத்தார். அப்பொழுது ஒருவர்மீது அவேசம் வந்து, சுப்பிரமணிய ஐயர் முழுப்பிரார்த்தனையையும் சரியே செலுத்திவிட்டுச் செல்லாவிடில் தீங்கு நேரிடும் என்று சொல்லப்பட்டது. உடனே ஐயர் தம்முடன் வந்துளாரைநோக்கி யாராவது தமக்குத் தெரியாது பிரார்த்தனை செய்துகொண்ட துண்டா என்று கேட்டார். ஸ்ரீமான் ஐயரின் மாமியார் தமது பெண்ணுக்குப் பிள்ளை பிறந்தால் அக்குழந்தையின் நிறையளவு ரூபாய் செலுத்துவதாகப் பிரார்த்தனை செய்துகொண்டதாகக் கூறினார். குழந்தை எடையிலிடப்பட அது 600 ரூபாய் எடை நின்றது. ஸ்ரீமான் ஐயர் கையில் பணமில்லாததினால் திருப்பதியிலுள்ள விருபாக்ஷ குருநாத செட்டியாரிடமிருந்து 1200 ரூபாய் வாங்கிவந்து மீண்டும் மலை ஏறி ஸன்னதியில் குழந்தையை ஒரு திராசிலிட்டுப் பணத்தைப்போட்டனர். அப்பொழுது குழந்தை 920 ரூபாய் எடை நின்றது. ஸ்ரீ வெங்கடாசலபதி பிரார்த்தனை சரியே செலுத்தப்படாத குற்றத்திற்காக 320 ரூபாய் அபராதம் வசூலித்துள்ளார் என்று அங்கிருந்தோர்கூறினர். ஸ்ரீமான் ஐயர் பிறகு மலையிறங்கிச் சுகமே தமதூர்சென்றனர்.

***

KALANILAYAM.
REG. No. M. 2324.

ஆங்கில ஆசான்

எமதுலேடி டிரேட் மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

60 நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிகப் பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துகளில் அச்சியற்றி யுள்ளோம். இதுவரை 53100 புத்தகங்கள்செலவாயுளது இதன் மேன்மைக் கடையாளம். இப் பத்தாம் பதிப்பு ஆங்கில வாசாணைப்போல், வேறு எப்புத்தகமும் சீக்கிரத்தில் ஆங்கிலம் கற்றுக்கொள்ள உதவாது. நம் முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர் கூட 10-வது பதிப்பை வாங்கவேண்டும். இதில் 1 அணு முதல் 3000 ரூபாய் வரைச் சம்பளம் வாடகைக் கணக்குளது. 800 பக்கங்களுக்கு மேற்கொண்ட அழகிய சீமைக் கலிக்கோ பயிண்டுடையது.

விலை ரூ 2.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்றுறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய
:: இராமாயண வினு விடை ::

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு 380 பக்கங்கள் கொண்டது. ஏழு காண்டங்களும், அரிய நீதிகளும், தெளிவுவாய்ந்த அநுபந்தங்களும் அடங்கியது. விலை ரூபா 1 8 0.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்
:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச் செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ 1
5 புட்டிகள் விலை ரூ. 4
ஆரோக்கிய கிரந்தம் இனும்!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு
பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு
இவற்றிற்கு இன்ஷியூர் செய்யுங்கள்.

குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஐவேஜி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00
திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.
ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை
நாஷனல் நெருப்பு
& ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார்
கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0
காரனேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம்
வி. விச்வநாத பிள்ளை இயற்றியது
676 பக்கங்கள் கொண்டது.
ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலாநிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)